بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ  نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ  وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 8

இதழ் 4

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444-ரஜப் 03 ★ ஹிஜ்ரி ஷம்ஸி-1402, சுல்ஹ் 26 ★ 26 ஜனவரி -2023


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ شَرَّ الدَّوَآبِّ عِنۡدَ اللّٰہِ الصُّمُّ الۡبُکۡمُ الَّذِیۡنَ لَا یَعۡقِلُوۡنَ ﴿۲۳﴾

**பொருள் :**

நிச்சயமாக அல்லாஹ்விடத்து உயிரினங்களில் மிகக் கெட்டது புரிந்து கொள்ளாத செவிடர்களும், ஊமையர்களுமேயாவர்.

(அல் அன்ஃபால் : 23)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

# அஹ்மதிய்யத்தின் தலைமையகம் காதியான் தாருல் அமானில் 127வது வெற்றிகரமான மற்றும் அருளுக்குரிய ஜல்ஸா ஸாலானா

**மார்க்க, ஆன்மீக மற்றும் நல்லொழுக்க முன்னேற்றங்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜல்ஸாவின் நோக்கங்களாக கூறியுள்ளார்கள். மேலும் இதில் தீவிரமாக அழுத்தமும் கொடுத்துள்ளார்கள்**

**அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைபெற்றுள்ள உலகின் ஒவ்வொரு நாட்டிலும் இந்த நோக்கங்களை அடைவதற்காகவே ஜல்ஸா ஸாலானா நடக்கின்றது**

**1891 ஆம் ஆண்டு ஜல்ஸாவில் 75 நபர்களும், 1892 ஆண்டு ஜல்ஸாவில் 327 நபர்களும் கலந்து கொண்டனர்**

**இன்று அல்லாஹ்வின் அருள் மழை எந்த அளவு பொழிந்து கொண்டிருக்கின்றது என்றால் அல்லாஹ் ஒவ்வொரு நாட்டிலும் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் கலந்து கொள்பவர்களை நமக்கு காட்டிக் கொண்டு வருகின்றான்.**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லாஹ் செய்த வாக்குறுதிகளுக்கும், அல்லாஹ்வின் உதவிகளுக்கும் இது சான்று இல்லையா? நிச்சயமாக சான்று ஆகும்**

mta **இன்டர்நேஷனல் மூலமாக இஸ்லாமாபாத் லண்டன், யூ.கேவிலிருந்து ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜல்ஸா ஸலானா காதியான் நிறைவுரை ஆற்றினார்கள்**

**கோவிட் 19 -க்கு பிறகு முழுமையான பொலிவுடன் ஜல்ஸா நடந்தது * மூன்று நாட்கள் ஜல்ஸா நிகழ்ச்சிகள்** Live streaming **செய்யப்பட்டன * மேலும் அதன் மூலம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் ஜல்ஸாவிலிருந்து மக்கள் பயன் பெற்றனர்.** Live streaming **மூலமாக 82500 நபர்கள் ஜல்ஸா நிகழ்ச்சிகளைக் கண்டுள்ளனர் * ஜல்ஸாவில் 14500 அஹ்மதிய்யத்தின் நேசர்கள் கலந்து கொண்டனர் * பைத்துல் ஃபுதூஹ்வில் 1200 நபர்களும், மஸ்ஜித் ஃபஸ்ல் லண்டனில் 400 நபர்களும் ஒன்றுகூடினர் * தஹஜ்ஜுத் தொழுகை * தர்ஸுல் குர்ஆன் மற்றும் திக்ரே இலாஹியால் நிறைந்த சூழல் நிலவியது * ஆலிம் பெருமக்களின் சொற்பொழிவுகள் * 9 வெளிநாட்டு மொழிகளில் ஜல்ஸா நிகழ்ச்சிகள் உடனடி மொழியாக்கம் * நிக்காஹ் அறிவிப்புகள் * எலக்ட்ரானிக் மீடியாக்களில் ஜல்ஸா செய்திகள் ஒளிபரப்பு * மகிழ்ச்சி மற்றும் அமைதி நிறைந்த சூழலில் ஜல்ஸாவின் அனைத்து நிகழ்ச்சிகளும் நிறைவடைந்தன**

அல்ஹம்துலில்லாஹ் டிசம்பர் 23,24,25 2022 அன்று வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் ஜல்ஸா ஸாலானா காதியான் புஸ்தானே அஹ்மதின் பரந்த வளாகத்தில் நடைபெற்று மிகவும் சீருடனும், சிறப்புடனும் நிறைவடைந்தது. இதற்கு முன்னர் கொரானா தொற்றின் காரணமாக 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் ஜல்ஸா நடைபெறவில்லை. 2021 ஆம் ஆண்டு குறுகிய எண்ணிக்கையிலான விருந்தினர்களின் வருகையுடன் ஜல்ஸா நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ் இந்த வருடம் ஜல்ஸா ஸாலானா காதியான் தனது முழுமையான பொலிவுடன் நடைபெற்றது. நாட்டின் தொலை தூரப் பகுதிகளிலிருந்து அஹ்மதிய்யத்தின் தொண்டர்கள் மிகவும் ஆர்வத்துடனும், உணர்வுடனும் ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்காக காதியான் வரத் தொடங்கினார்கள். மேலும் ஜல்ஸாவின் நாட்கள் நெருங்க, நெருங்க காதியான் தாருல் அமானின் பொழிவும் அதிகரித்துக் கொண்டே சென்றது. எந்த அளவிற்கு என்றால், காதியான் முழுமையாக விருந்தினர்களால் நிறைந்துவிட்டது. எங்கு சென்றாலும், எங்கு பார்த்தாலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களே தென்பட்டனர். வெளிநாடுகளிலிருந்து ஒரு பெரும் எண்ணிக்கையில் அஹ்மதிய்யத்தின் நேசர்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்டனர். காதியான் தாருல் அமான் அன்பிற்குரிய நகரம் மீண்டும் ஒருமுறை மகிழ்ச்சிகளாலும், பொழிவுகளாலும் நிறைந்துவிட்டது. விருந்தினர்களின் வருகைக்கு முன்னரே மின்சாரத்துறையின் சார்பாக முஹல்லாவின் அனைத்து தெருக்களும், சாலைகளும் டியூப் லைட்டுகள் மூலம் ஒளிமயமாக்கப்பட்டன. பஹஷ்தி மக்பரா, தாருல் மஸீஹ், மஸ்ஜித் முபாரக், மஸ்ஜித் அக்ஸா, மற்றும் மினாரத்துல் மஸீஹ் ஆகிய இடங்கள் சிறு, சிறு மின்சார வண்ணமய விளக்குகளால் மணப்பெண்ணைப் போன்று அலங்கரிக்கப்பட்டன. இவ்வாறாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியின் இந்த ஆன்மீக நகரம் தனது மறைமுகமான பிராகசத்துடன் வெளிப்படையான பிரகாசத்தாலும் ஒளிவீசியது.

### ஜல்ஸாவின் ஊழியர்கள் மற்றும் ஏற்பாடுகளின் ஆய்வு

டிசம்பர் 19 ஆம் தேதி 2022 ஆம் ஆண்டு திங்கட்கிழமை சரியாக காலை 11.30 மணிக்கு புஸ்தானே அஹ்மத் வளாகத்தில் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் பிரதிநிதி மதிப்பிற்குரிய நாஸிர் சாஹிப் ஆஃலா மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத் காதியானின் உள்ளூர் அமீர் மவ்லானா முஹம்மது இனாம் கௌரி சாஹிப் அவர்களின் தலைமையில் ஊழியர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் பிரதிநிதி புஸ்தானே அஹ்மது வளாகத்தில் வருகை தந்ததும் முழக்கத்துடன் வரவேற்கப்பட்டார்கள். அன்னார் முதன் முதலில் ஜல்ஸா ஸாலானாவின் துறைகளின் பேனர்களுக்கு பின்னால் நின்று கொண்டிருந்த முன்தஸீம்கள், நாஸிம்கள் மற்றும் ஊழியர்களை சந்தித்தார்கள். மேலும் கைகுலுக்கினார்கள். அதன் பிறகு ஹுஸுர் அன்வர் அவர்களின் பிரதிநிதி பெண்களின் பகுதிக்கு சென்றார்கள். பின்னர் திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஆசிரியரான மதிப்பிற்குரிய ஹுமாயூன் ரஷீத் சாஹிப் திலாவத் செய்து அதன் மொழியாக்கத்தை வாசித்தார். அதன் பிறகு ஹுஸுர் அன்வர் அவர்களின் பிரதிநிதி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். சரியாக 11.30 மணிக்கு கூட்டுத் துஆவுடன நிகழ்ச்சி முடிவடைந்தது.

### டிசம்பர் 23,2022 -வெள்ளிக்கிழமை
### முதல் நாள்- துவக்க அமர்வு

கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் காலையில் விரைவாக ஜல்ஸா திடலில் வந்து அமரத் தொடங்கிவிட்டார்கள். மேலும் துஆ செய்து கொண்டிருந்தனர். மேலும், ஈமானிய உணர்வுடன் நாரே தக்பீர் அல்லாஹு அக்பர் என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர். இந்தக் காட்சி மிகவும் ஈமானை வலுவூட்டக் கூடியதாக இருந்தது.

**இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்...**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹு அக்பர்! (அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) என்ற) அந்த இருவரின் உண்மை மற்றும் தூய்மையின் அந்தஸ்து எவ்வளவு உயர்ந்தது?**

**அவர்கள் இருவரும் எப்படிப்பட்ட (அருளுக்குரிய) மண்ணறையில் நல்லடக்கம் ஆகியுள்ளார்கள் என்றால் மூஸா (அலை) மற்றும் ஈஸா (அலை) ஆகியோர் உயிருடன் இருந்திருந்தால் மிகவும் ஏக்கத்துடன் அங்கு நல்லடக்கம் ஆகுவதற்கு விருப்பம் கொண்டிருப்பார்கள்**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அரசர் ஆனார்கள். ஆனால், அன்னாரிடத்தில் பணிவு இருந்தது. என்னை மக்களுக்கு தொண்டாற்றுவதற்காக அல்லாஹ் நியமித்துள்ளான். மேலும் சேவை செய்வதற்கு எவ்வளவு காலம் எனக்கு கிடைக்குமோ அது அவனுடைய கருணையாகும் என்று அன்னார் (ரலி) கூறிவந்தார்கள்**

**அன்னார் (ரலி) ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வீட்டின் அடிமையாகிவிட்டார்கள். எனவே அவரது ஒவ்வொரு விஷயமும் நமக்கு அன்பிற்குரியதாக ஆகிவிட்டது. இந்த மகத்துவத்தை எங்களது உள்ளத்திலிருந்து எந்த ஒரு நபராலும் அழிக்க முடியாது. நவூதுபில்லாஹ் நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அவமரியாதை செய்கின்றோம் என்று நம் மீது பழிசுமத்துகின்றனர். ஆனால் நம்முடைய எண்ணங்களோ இவ்வாறு இருக்கின்றன**

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய போதனையானது அன்னாரின் மீது உடனடி தாக்கத்தை ஏற்படுத்தி ஒளிமயமாக்கிவிட்டது. அன்னார் (ரலி) எந்த தர்க்கமும் செய்யவில்லை. எந்த அடையாளத்தையும் வேண்டவில்லை. செவிமடுத்த உடன், தாங்கள் (ஸல்) நபித்துவம் வாதம் செய்கின்றீர்களா? என்று மட்டுமே கேட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஆம் என்று கூறினார்கள். அப்போது, நான் எல்லாரையும் விட முதலில் ஈமான் கொள்கின்றேன். தாங்கள் (ஸல்) சாட்சியாக இருங்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள பள்ளிவாசலில் 02 டிசம்பர் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **02ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் நற்பண்புகள் (கடந்த குத்பாவில்) எடுத்துக் கூறப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாக, மக்களில் அன்னார் அனைவரையும் விட சிறந்தவராகவும், நேசத்திற்குரியவராகவும் இருந்தது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மக்களில் ஒருவர் மற்றவரை நாங்கள் சிறந்தவராக குறிப்பிட்டு வந்தோம். மற்றவரை விட யார் சிறந்தவர்? என்பதில் போட்டியும் நடந்து வந்தது. அந்தநேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே அனைவரையும் விட சிறந்தவர் ஆவார்கள் என்று நாங்கள் கருதி வந்தோம். பின்னர் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அதன் பிறகு, ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி). (ஸஹீஹ் புகாரி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழர்களின் சிறப்புகள், ஹதீஸ் எண்: 3655)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு பிறகு மக்களில் அனைவரையும் விட சிறந்தவரே! என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை புகழ்ந்தார்கள். அப்போது நீங்கள் அவ்வாறு கூறுகின்றீர்கள். ஆனால் உமரை விட சிறந்த நபர் மீது சூரியன் உதிக்கவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவிமடுத்துள்ளேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (சுனன் அத்திர்மிதி, பாடம்-அல்மானகிப், ஹதீஸ்:3684)

அதாவது நான் சிறந்தவர் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால், நீங்கள் சிறந்தவர் ஆவீர்கள் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களைக் குறித்தும் கூறியதை நான் செவிமடுத்துள்ளேன் என்று கூறி அன்னார் (ரலி) உடனடியாக தனது பணிவை வெளிப்படுத்தினார்கள்.

அப்துல்லாஹ் பின் ஷஃபீக் அறிவிக்கின்றார்கள் :

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஸஹாபிகளில் அனைவரையும் விட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் நேசத்திற்குரியவர் யார்? என்று நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டேன். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) என்று கூறினார்கள். அடுத்து யார்? என்று நான் கேட்டேன். ஹஸ்ரத் உமர் (ரலி) என்று அன்னார் (ரலியல்லாஹு அன்ஹா) கூறினார்கள். அடுத்து யார்? என்று நான் கேட்டேன். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) என்று அன்னார் (ரலியல்லாஹு அன்ஹா) கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்கள்: அடுத்து யார்? என்று நான் கேட்டேன். பின்னர் அன்னார் (ரலி) மௌனமாகிவிட்டார்கள். (சுனனுத் திர்மிதி, கிதாபுல் மனாகிப், ஹதீஸ்: 3657)

முஹம்மது பின் ஸீரீன் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் குற்றம் குறை காணக்கூடிய ஒருநபரை என்னால் கற்பனைக் கூட செய்து பார்க்க முடியாது. (சுனனுத் திர்மதி, கிதாபுல் மனாகிப், ஹதீஸ்: 3685)

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எனக்கு அன்பு உள்ளது என்று வாதிக்கும் ஒருவரால் அவ்வாறு செய்ய முடியாது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் குறை கண்ட பிறகு, தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டுள்ளேன் என்ற அவரது வாதம் தவறானதாகும். ஏனெனில், இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் அன்பிற்குரியவர்களாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஸ் பின் அம்ர் (ரலி) அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஸல்மான் (ரலி), ஹஸ்ரத் ஸுஹைப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் பிலால் (ரலி) ஆகியோர் சில மக்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அபூ ஸுஃப்யான் வந்தார். அப்போது, அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் வாள்கள் அல்லாஹ்வின் எதிரியின் கழுத்துடன் இது வரை தனது கணக்கை ஏன் தீர்க்கவில்லை? என்று அந்த மக்கள் கூறினர். அதாவது, இதற்குள் எவ்வாறு பழிதீர்த்து இருக்க வேண்டுமோ அவ்வாறு பழிதீர்க்கவில்லை. அறிவிப்பாளர் கூறுகின்றார்:

இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், குரைஷியர்களின் பெரும் பெரும் தலைவர்களைக் குறித்து நீங்கள் இவ்வாறா கூறுகின்றீர்கள்? என்று கேட்டார்கள். அபூஸுஃப்யானும் குரைஷியர்களின் தலைவர்களில் ஒருவராக

இருந்தார். நாம் அவர்களை பழிதீர்க்கவில்லையே என்று நீங்கள் கூறுகின்றீர்கள்.

பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சுயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். மேலும் இந்த விஷயத்தை அன்னாரிடம் கூறினார்கள். அப்போது, அபூபக்ரே! அநேகமாக நீங்கள் அந்த நபர்களை அதாவது ஸல்மான், ஸுஹைப் மற்றும் பிலாலை கோபப்படுத்திவிட்டீர்கள். நீங்கள் அவர்களை கோபப்படுத்தவில்லையென்றால், நீங்கள் உமது இறைவனை கோபப்படுத்திவிட்டீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மூன்று நபர்களிடம் சென்றார்கள். மேலும், அன்பிற்குரிய சகோதரர்களே! நான் உங்களை கோபப்படுத்தி விட்டேனா? என்று கூறினார்கள். மிகவும் வருத்தம் தெரிவிக்கும் வடிவில் அவ்வாறு கூறினார்கள். அதற்கு, இல்லை! அவ்வாறு எந்த விஷயமும் இல்லை. எங்களது சகோதரரே! அல்லாஹ் தங்களை மன்னிப்பானாக! என்று அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம், பாடம்-ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழர்களின் சிறப்புகள், ஹதீஸ் எண்:6412)

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் எந்த அளவுக்கு பணிவு இருந்தது என்பதும் இந்த இடத்தில் நிரூபணமாகிறது. அடிமைத்துவத்திலிருந்து அந்த நபர்களை அன்னார் (ரலி) விடுவித்திருந்தார்கள். அவ்வாறிருந்தபோதிலும் அந்த நபர்களிடம் அன்னார் சென்றார்கள். மேலும், அவர்களிடம் மன்னிப்பு கோருகின்றார்கள்.

அடுத்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான நேசம் மற்றும் கட்டுப்படுதலின் தரம் அன்னாரிடம் எவ்வாறு இருந்தது? என்றும் பாருங்கள். அதாவது நீங்கள் அதிருப்தியடையச் செய்துவிட்டீர்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்களே தவிர, நீங்கள் சென்று அவர்களிடம் மன்னிப்பு கேளுங்கள் என்று கூறவில்லை. ஆனால், அன்னார் (ரலி) உடனடியாக சுயமே அவர்களிடம் சென்றார்கள். மேலும், அந்த நபர்களிடம் மன்னிப்பு கேட்டார்கள்.

இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு விரிவுரையில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அதாவது இது ஹுதைபிய்யா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது போர் நிறுத்தத்திற்கான ஒப்பந்தம் செய்யப்பட்ட பிறகு நடந்த சம்பவம் ஆகும். அப்போது அபூஸுஃப்யான் இன்னும் முஸ்லிமாக ஆகியிருக்கவில்லை. நாம் ஏன் இவரை முன்னரே கொலை செய்திருக்கவில்லை? என்று அந்தநேரத்தில் முஸ்லிம்கள் எண்ணம் கொண்டிருந்தனர். (ஸஹீஹ் முஸ்லிம், அந்நூவியின் விரிவுரை, பாகம் 16, பக்கம் 96, முஅஸ்ஸஸா குர்தபா-1991)

திருக்குர்ஆன் மனனம் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் விஷயங்களை கூறியுள்ளார்கள். கூறினார்கள்:

அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்களின் முஹாஜிர் ஸஹாபிகளில் கீழ் கண்டவர்கள் ஹாஃபிழாக இருந்தது நிரூபணமாகியுள்ளது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் இப்னு மசூத் (ரலி), ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி), ஹஸ்ரத் ஸாலிம் (ரலி), ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸாயிப் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி).

பெண்களில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி), ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி), ஹஸ்ரத் உம்மே ஸல்மா (ரலி) ஆகியோர் ஆவர். இவர்களில் பெரும்பாலார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளிலேயே திருக்குர்ஆனை மனனம் செய்திருந்தார்கள். சிலர் அன்னாரின் மரணத்திற்கு பிறகு மனனம் செய்தார்கள். (தீபாசா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி-20, பக்கம் 429-430)

ஸானீ இஸ்னைன் ( இருவருள் ஒருவர் ) என்பது தொடர்பாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சொந்த அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்:

நான் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் கூறினேன். நான் அப்போது குகையில் இருந்தேன். (அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் குகையில் இருந்தபோது கூறினார்கள்)

ஒருவேளை அவர்களில் ஒருவர் தனது கால்களுக்கு கீழே (குனிந்து) பார்த்தால் (அதாவது வெளியில் நின்றிருந்த நிராகரிப்பாளர் கீழே குனிந்து பார்த்தால்), பின்னர் நிச்சயமாக அவர் நம்மை பார்த்துவிடுவார். அப்போது, அபூபக்ரே எந்த இரு நபர்களுடன் மூன்றாவதாக அல்லாஹ் இருக்கின்றானோ அவர்களைக் குறித்து உமது கருத்து என்ன? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். (ஸஹீஹ் புகாரி, பாடம்-ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் தோழர்களின் சிறப்புகள், ஹதீஸ் எண்: 3653)

இது புகாரியின் அறிவிப்பு ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

(ஹஸ்ரத்) அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் குறிப்பான மேன்மைகளில் ஒரு தனித்தன்மையான விஷயம் இதுவும் ஆகும். அதாவது ஹிஜ்ரத் பயணத்தில் அன்னார் தோழமைக்காக குறிப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். படைப்பினங்களில் அனைவரையும் விட சிறந்தவரான அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கஷ்டங்களில் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அன்னாருடன் இருந்தார்கள். அன்னார் துன்பங்களின் ஆரம்பத்திலேயே ஹுஸூர் (ஸல்) அவர்களின் சிறப்பான அன்பிற்குரியவராக ஆக்கப்பட்டிருந்தார்கள். அதாவது சிறப்பான நண்பராக ஆக்கப்பட்டிருந்தார்கள். இறைவனின் மிகவும் நேசத்திற்குரியவரான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடன் அன்னாரின் சிறப்பான தொடர்பு நிரூபணம் ஆக வேண்டுமென்பதற்காக அவ்வாறு அன்னார் (ரலி) ஆக்கப்பட்டார்கள். இதில் இந்த இரகசியம் இருந்தது. அதாவது, ஸித்தீகே அக்பர் (ரலி) அவர்கள், ஸஹாபிகளில் அதிக வீரம் கொண்டவராகவும், இறையச்சமுடையவராகவும், மேலும் அனைவரையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பிற்குரியவராகவும் இருந்தார்கள் என்பதை அல்லாஹ் நன்கறிந்திருந்தான். மேலும், அகில உலகங்களின் தலைவர் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தில் அன்னார் (ரலி) மூழ்கியிருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆரம்பம் முதலே ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு பொருளாதார உதவி செய்து வந்தார்கள். மேலும், அன்னாரின் முக்கிய விவகாரங்களை கவனித்து வந்தார்கள். எனவே அல்லாஹ் துன்பமான நேரத்திலும், கடினமான சூழ்நிலைகளிலும் தனது நபி (ஸல்) அவர்களுக்கு அன்னார் (ரலி) மூலமாக ஆறுதல் நல்கினான். மேலும் அஸ்ஸித்தீக் என்ற பெயரையும், ஈருலக நபி (ஸல்) அவர்களின் நெருக்கத்தையும் அன்னாருக்குரியதாக ஆக்கினான். அல்லாஹ் அன்னாருக்கு ஸானீ இஸ்னைன் (அந்த இருவருள் ஒருவர்) என்ற பெருமைக்குரிய பட்டத்திலிருந்து பயன்பெறச் செய்தான். மேலும் தனது சிறப்பிலும் சிறப்பான அடியார்களைச் சேர்ந்தவராக அன்னாரை ஆக்கினான். (சிர்ருல் குலஃபா, மொழியாக்கம், பக்கம் 59-60, ரூஹானி ஹஸாயீன், தொகுதி 8, பக்கம் 338-339)

முஸ்லிம் அல்லாத நூலாசிரியர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு புகழ் அஞ்சலி செலுத்தியுள்ளார்கள்.

அல்ஜீரியாவைச் சார்ந்த இருபதாம் நூற்றாண்டின் ஆன்ட்ரே சர்வியர் (Andre servier) என்ற ஒரு வரலாற்றாசிரியர் இருக்கின்றார். அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் குறித்து எழுதுகின்றார்: அபூபக்ர் எளிமையான இயல்பைக் கொண்டிருந்தார். எதிர்பார்த்திராத உச்சத்தை அடைந்த பிறகும் அவர் ஏழ்மையான வாழ்க்கையே வாழ்ந்தார். அவர் மரணம் அடைந்தபோது ஒரு பழைய ஆடையையும், ஒரு அடிமையையும், ஓர் ஒட்டகமும் அவர் விட்டுச் சென்ற சொத்தாக இருந்தது. அவர் மதீனாவாசிகளின் உள்ளங்களில் உண்மையாக ஆளுமை செலுத்தி வந்தார். அன்னாரிடம் ஒரு மாபெரும் சிறப்பு இருந்தது. அது வலிமையும், ஆற்றலுமாக இருந்தது.

அவர் எழுதுகின்றார்: ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் எந்த சிறப்பின் மூலம் வெற்றிக் கண்டார்களோ மேலும் எதனை அன்னாரின் எதிரிகள் ஒப்புக் கொண்டிருந்தார்களோ அந்த சிறப்பு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இருந்தது. அது என்ன சிறப்பாக இருந்தது? தடுமாற்றம் அற்ற ஈமான், வலிமையான உறுதி ஆகும்.

அபூபக்ர் சரியான இடத்தில் சரியான மனிதராக இருந்தார்.

அடுத்து எழுதுகின்றார்:

எல்லாபுறமும் கலகம் வெடித்திருந்தபோது அந்த முதியவர் மற்றும் நல்லொழுக்கம் கொண்ட மனிதர் தனது கருத்தை நிலைநாட்டினார். அன்னார் நம்பிக்கைக்குரிய மற்றும் தடுமாற்றம் அற்ற உறுதியுடன் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் பணியை புத்தம் புதிதாக தொடங்கினார்.

(Islam and the Psychology of the Muslim by Andre sevier page:51)

அடுத்து, ஜே.ஜே சான்டர்ஸ் ( J.J.Saunders) என்ற ஒரு பிரிட்டனைச் சார்ந்த வரலாற்றாசிரியர் இருக்கின்றார். அவர் எழுதுகின்றார்:

முஸ்லிம்களிடத்தில் முதல் கலீஃபாவின் நினைவு எப்போதும் எப்படிப்பட்ட மனிதரின் வடிவில் நிலைபெற்று வருகிறது என்றால், அன்னார் முழுமையான நன்றியுணர்வு, பரிவு மற்றும் கருணையின் வடிவமாக திகழ்கின்றார்கள். மேலும் எந்தவொரு அதி தீவிரமான புயலும் அன்னாரின் நிரந்தரமான பொறுமையின் இயல்பை அசைக்க முடியவில்லை.

அன்னாரின் ஆட்சிக் காலம் குறுகிய காலமாக இருந்தபோதிலும் அதில் கிடைத்த வெற்றிகள் மகத்துவமிக்கதாக இருந்தன. அன்னாரின் நிரந்தர இயல்பும், உறுதிப்பாடும், மனவலிமையும் மார்க்கப் புறக்கணிப்பை கட்டுப்படுத்தி அரேபிய சமுதாயத்தை மீண்டும் இஸ்லாமிய வட்டத்திற்குள் நுழைய செய்துவிட்டது. மேலும் சிரியாவை வெற்றிக் கொள்ள வேண்டும் என்ற அன்னாரின் உறுதியான எண்ணம் அரேபிய உலகின் ஆட்சிக்கான அடித்தளத்தை அமைத்து கொடுத்து விட்டது.

(A History of Medieval by J.J.Saunders Page 44-45 London 2002)

அடுத்து, எச்.ஜி வேல்ஸ் ( H.G. Wells) என்ற மற்றோர் ஆங்கிலேயே எழுத்தாளர் இவ்வாறு கூறுகின்றார்: ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைக் காட்டிலும் இஸ்லாமிய ஆட்சிக்கான அசல் அடித்தளத்தை அமைக்கக் கூடியவர் அன்னார் (ஸல்) அவர்களின் தோழராகவும், உதவியாளருமாக இருந்த அபூபக்ர் ஆவார் என்று கூறப்படுகிறது.

இவர் இதனை இங்கு மிகைப்படுத்தி கூறுகின்றார். அது இருக்கட்டும். எவ்வாறு இருப்பினும் அவர் எழுதுகின்றார். பின்னர் தொடர்ந்து இவ்வாறு எழுதுகின்றார்:

முஹம்மது (ஸல்) அவர்கள் தனது தடுமாறக்கூடிய இயல்புக்கு மத்தியிலும் இஸ்லாத்தின் ஆரம்பத்தின் மூளையாகவும், வடிவமாகவும் இருந்தார்கள் (நவூதுபில்லாஹ்) என்றால், அபூபக்ர் அதன் புரிதலாகவும், உறுதியான எண்ணமாகவும் திகழ்ந்தார்கள். முஹம்மது (ஸல்) தடுமாற்றம் அடையும்போதெல்லாம் அபூபக்ர் அன்னாருக்கு தைரியமூட்டி வந்தார்கள்.

எவ்வாறு இருப்பினும் இந்த கூற்றுகள் எல்லாம் அவருடைய முட்டாள்தனமான மற்றும் வீணான கூற்றுகள் ஆகும். அதில் எந்த உண்மையும் இல்லை. ஆனால் தொடர்ந்து அவர் சரியான விஷயத்தை எழுதுகின்றார். அவர் இவ்வாறு எழுதுகிறார்:

முஹம்மது (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது அபூபக்ர் (ரலி) அன்னாருடைய கலீஃபாவாகவும், பிரதிநிதியாகவும் ஆனார். மலையையும் அசைக்கக்கூடிய ஈமானுடன் அன்னார் பெரும் எளிமையுடனும், புரிதலுடனும் மூன்றாயிரம் அல்லது நான்காயிரம் அரேபியர்களைக் கொண்ட சிறிய, சிறிய படையுடன் முழு உலகையும் அல்லாஹ்வின் கூற்றை ஏற்கச் செய்யக்கூடிய பணியை தொடங்கிவிட்டார்.

(A History of the World by H.G.Wells Page-76)

எவ்வாறு இருப்பினும், நான் கூறியதுபோன்று எழுத்தாளர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சில சிறப்புகளை குறிப்பிட்டுள்ளார். அவை சந்தேகமின்றி அன்னாரிடம் இருந்தன. ஆனால், இந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அந்த உயர்தரமான நபித்துவ அந்தஸ்தின் உண்மையான புரிதலையும் அறிவையும் பெற்றிருக்கவில்லை. அதன் காரணமாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை புகழ்வதில் எந்த அளவிற்கு மிகைப்படுத்துதலை கையாள்கின்றனர் என்றால் அவை எந்த வகையிலும் சரியானதாக இருக்க முடியாது. அதேநேரம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களாக இருக்கட்டும் அல்லது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களாக இருக்கட்டும். அவர்கள் அனைவரும் தமது எஜமானரும், தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு நன்றியுடையவர்களாகவும், முழுமையாக கட்டுப்படக்கூடியவர்களாகவும், நேசர்களாகவும் இருந்தனர். இவர்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மூளையாக இருக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு சேவை செய்யும் வகையில் கரங்களாகவும், பாதங்களாகவும் இருந்தார்கள். அதேபோன்று, இஸ்லாமிய மார்க்கம் என்பது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மூளை அல்லது செயலின் பெயரல்ல. அதாவது இஸ்லாம் என்பது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மூளையாக இருந்தது என்று அவர் எழுதியுள்ளது போன்று கிடையாது.

மாறாக, முற்றிலும் இறைவனின் வழிகாட்டுதல் மற்றும் இறை வஹீயின் விளைவாக கிடைத்த ஒரு முழுமையான ஷரீஅத் மற்றும் மார்க்கத்தின் பெயர் இஸ்லாம் ஆகும். அதேபோன்று எந்தவொரு பதற்றம் அல்லது தடுமாற்றத்திற்கான சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தைரியம் ஊட்டவில்லை. இன்னும் கூறப்போனால், முதலாவதாக மக்களில் மிகவும் தீரமிக்கவரும், வீரரும், துணிவு மிக்கவருமான நபி (ஸல்) அவர்களின் முழு வாழ்நாளிலும் நம்மால் ஒருபோதும் எந்த ஒரு பதற்றத்தையோ அல்லது தடுமாற்றத்தையோ பார்க்க முடியாது. ஒருவேளை ஏதாவது கவலைக்கான சந்தர்ப்பம் வந்திருந்தாலும் கூட வல்லமையும், ஆற்றலும் மிகுந்த இறைவனே அன்னாருக்கு ஆறுதல் நல்கினான்.

அபூபக்ர் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தைரியமூட்டினார் என்று எழுத்தாளர் எழுதுகின்றார். ஆனால், அதற்கு நேர்மாற்றமாகவே நாம் பார்க்கின்றோம். அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்வில் ஏதாவது கவலை அல்லது பதற்றத்திற்கான நேரம் வந்ததென்றால், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அன்னாருக்கு தைரியமூட்டி வந்தார்கள். உதாரணமாக, ஹிஜ்ரத்தின் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் கவலையடைந்தார்கள். மேலும் பதற்றமடைந்தார்கள். நிச்சயமாக, அந்தப் பதற்றம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீதான நேசத்தின் காரணமாக அன்னார் (ஸல்) அவர்களைக் குறித்தே இருந்தது. ஆயினும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றமடைந்த அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னாருக்கு தைரியமூட்டினார்கள்.

لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا

அபூபக்ரே! நீங்கள் பயப்பட வேண்டாம். அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான் (தவ்பா:40) என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். எனக்கு அந்த பதற்றம் இருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு ஆறுதல் நல்கினார்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சுயமே கூறிய விஷயம் முன்பும் எடுத்துரைக்கப்பட்டுவிட்டது.

எனவே இந்த சம்பவமே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உறுதி, முழுமையான நம்பிக்கை மற்றும் அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் சிறப்பிற்குரிய நபியாக இருந்தார்கள் என்பதற்கு ஒரு தெளிவான சான்றாகும். ஆனால், எவ்வாறு இருப்பினும் இந்த அறிவுக் குருடர்கள் ஓர் உண்மையான விஷயத்தை கூறுவதற்கு நிர்பந்தத்திற்கு உள்ளாகும்போது இடையில் ஏதாவது ஒரு அசுத்தத்தை கலந்துவிடுவதற்கு கண்டிப்பாக முயற்சி செய்கின்றனர்.

அடுத்து, டி.டபுல்யூ அர்னால்ட் (T.W. Arnold) என்ற பிரிட்டனைச் சேர்ந்த மற்றொரு வரலாற்றாசிரியர் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்:

(அபூபக்ராகிய) அவர் ஒரு செல்வச் செழிப்பு மிக்க வியாபாரியாக இருந்தார். உயர் நல்லொழுக்கம், அவருடைய புத்திக்கூர்மை, மற்றும் திறமை ஆகியவற்றின் அடிப்படையில் அவரது ஊர்காரர்கள் அவருக்கு மிகவும் கண்ணியம் அளித்து வந்தார்கள். இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு, தமது எஜமானர் முஹம்மது (ஸல்) அவர்களின் போதனைகள் மீது நம்பிக்கைக் கொண்ட காரணத்தால் நிராகரிப்பாளர்கள் அதிக துன்பங்கள் கொடுத்து வந்த அந்த முஸ்லிம் அடிமைகளை விலைக்கு வாங்குவதற்காக அவர் தமது செல்வத்தின் பெரும் பகுதியை செலவிட்டார்.

(The Preaching of Islam by T.W. Arnold page 10- Archibald & co 1896)

அடுத்து, ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஒரு வரலாற்றாசிரியரும், பிரிட்டனின் இந்தியாவில் வட மேற்கு மாநிலங்களில் லெஃப்டினன்ட் கவர்னருமாக சர் வில்லியம் மூர் (Sir William Muir) இருந்தார். அவர் இவ்வாறு எழுதுகின்றார்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய ஆட்சிக் காலம் குறுகிய காலமாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பிறகு அபூபக்ரை விட அதிகமாக வேறு எவருக்கும் நன்றி கூற இஸ்லாம் கடமைப்பட்டிருக்கவில்லை. அதாவது, முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பிறகு, அபூபக்ர் (ரலி) அவர்களை விட வேறு எவரும் அதிகமாக இஸ்லாத்திற்கு தொண்டாற்றியிருக்கவில்லை.

(The Caliphate its rise, decline and fall by sir William Muir. Page -86, The religious tract Society 1892)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அழகிய நல்லொழுக்கங்களைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அபூபக்ர் (ரலி), மற்றும் உமர் (ரலி) இன்னும் கூறப்போனால் அபூஹுரைரா ஆகியோரின் பெயரைக் கூறும்போது பெரும் பெரும் வலிமை வாய்ந்த அரசர்கள் ரலியல்லாஹு அன்ஹு (அல்லாஹ் அவர்களின் மீது திருப்தி கொள்வானாக) என்று கூறுகின்றனரே! மேலும், அவர்களுக்கு தொண்டாற்றுவதற்காவது எங்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கக் கூடாதா? என விருப்பம் கொள்கின்றனரே! இது உண்மையில்லையா?

அவ்வாறிருக்க, அபூபக்ர், உமர், மற்றும் அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் ஏழ்மையான வாழ்க்கையை வாழ்ந்து சில நஷ்டங்களை சந்தித்தனர் என்று கூறுபவர் யார்? நிச்சயமாக அந்த மக்கள் உலகியல் ரீதியில் தங்கள் மீது ஒருவகையான மரணத்தை ஏற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டிருந்தனர். ஆனால், அந்த மரணம் அவர்களின் வாழ்வாக நிரூபணமானது. இனி எந்த ஒரு சக்தியும் அவர்களை அழிக்க முடியாது. அவர்கள் கியாமத் நாள் வரை உயிருடன் இருப்பார்கள்.

(நன்றி மற்றும் முக்கிய அறிவிப்புகள், அன்வாருல் உலூம், தொகுதி 2, பக்கம் 74)

அடுத்து அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அபூபக்ர் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் தற்செயலாக பிறந்துவிட்ட காரணத்தால் மட்டுமே அல்லாஹ் அபூபக்ராக ஆக்கவில்லை. உமர் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் தற்செயலாக பிறந்திருந்த காரணத்தால் உமர் (ரலி) அவர்களுக்கு அந்தஸ்தை வழங்கவில்லை. அதேபோன்று, உஸ்மான் (ரலி), அலி (ரலி) ஆகியோர் தற்செயலாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மருமகன்கள் என்ற அந்தஸ்தை அடைந்துவிட்டதனால் இறைவன் உஸ்மான் (ரலி), மற்றும் அலி (ரலி) என்ற அந்தஸ்தை அவர்களுக்கு வழங்கிவிடவில்லை. அல்லது தல்ஹா (ரலி), ஸுபைர் (ரலி) ஆகியோர் அன்னார் (ஸல்) குடும்பத்தை அல்லது அன்னாரின் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். மேலும் அன்னார் (ஸல்) காலத்தில் பிறந்துவிட்டனர் என்ற காரணத்தாலோ அவர்களுக்கு கண்ணியத்தையும், உயர் அந்தஸ்துகளையும் இறைவன் வழங்கவில்லை. மாறாக, இந்த மக்கள் தமது தியாகங்களை எப்படிப்பட்ட உயர் அந்தஸ்தை எட்டச் செய்துவிட்டனர் என்றால் அதனை அதிகமான மனிதர்களால் கற்பனைக் கூட செய்து பார்க்க முடியாது.

(குத்பாதே மஹ்மூத், தொகுதி 26. பக்கம் 384-385)

ஆக, தியாகங்களே மனிதனுக்கு உயர் அந்தஸ்தை பெற்றுத் தருகின்றன.

அடுத்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

நமது உள்ளங்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எவ்வளவு கண்ணியம் உள்ளது! ஆனால் அன்னாரின் பிள்ளைகளின் காரணமாக இந்த கண்ணியம் (நமது உள்ளங்களில்) உள்ளது என்று ஒருவரால் கூறமுடியுமா? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சந்ததிகள் எதுவரை இருந்தது என்பதை கூட நம்மில் பெரும்பாலார் அறிய மாட்டார்கள். அன்னாரின் சந்ததிகளின் வாழ்க்கை வரலாறு பாதுகாக்கப்பட்டதாக இல்லை. இன்று தங்களை தாங்களே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சந்ததிகளாக வெளிப்படுத்திக் கொண்டு தங்களை தாங்களே ஸித்தீகீ என்று கூறுகின்ற ஏராளமான மக்களும் இருக்கின்றனர். ஆனால், அவர்களிடம் நீங்கள் உண்மையிலேயே ஸித்தீகி என்று நீங்கள் சத்தியம் செய்யுங்கள். மேலும் உங்களின் குடும்ப பாரம்பரியத் தொடர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வரை சென்றடைகின்றதா? என்று அவர்களிடம் ஒருவர் கேட்டால் அவர்கள் ஒருபோதும் சத்தியம் செய்ய மாட்டார்கள். ஒருவேளை அவர்கள் சத்தியமும் செய்துவிட்டார்கள் என்றால் இவர்கள் பொய்யுரைக்கின்றனர், நம்பிக்கையற்றவர்கள் என்று நாம் கூறுவோம். அதற்கு காரணம் இதுவேயாகும். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சந்ததிகளின் வரலாறு இன்று ஒருவர் தம்மை தாமே உண்மையான முறையில் அன்னாரைச் சார்ந்தவர் என்று கூறிக் கொள்ளும் அளவிற்கு பாதுகாப்பானதாக இல்லை. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சந்ததிகளின் பணி மிக உயர்தரமானதாக உள்ளது என்பதற்காக நாம் அன்னாருக்கு கண்ணியம் வழங்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சந்ததிகளின் பணிகள் மிகவும் மேன்மையானதாக உள்ளது என்பதால் நாம் அன்னாருக்கு கண்ணியம் அளிக்கவில்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் சந்ததிகள் பெரும் சாதனைகள் புரிந்துள்ளனர் என்பதனால் நாம் அன்னாருக்கு கண்ணியம் வழங்கவில்லை. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சந்ததிகளிடம் சில தனிப்பட்ட சிறப்புகள் உள்ளன என்பதனால் நாம் அன்னாருக்கு கண்ணியம் அளிக்கவில்லை. (ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சந்ததிகளின் தொடர் இன்று வரை நிலைபெற்றுள்ளது. ஆனால், அன்னாரின் சந்ததிகள் இன்று வரை நிலைபெற்றுள்ளதால் அன்னாருக்கு கண்ணியம் வழங்கப்படவில்லை.) இன்னும் ஏராளமான ஸஹாபிகளும் உள்ளனர். அவர்களில் எவருடைய சந்ததியின் காரணமாகவும் நாம் அவர்களை நினைவுகூரவில்லை.

ஆக, உண்மை என்னவென்றால், நாம் அந்த ஸஹாபிகள் செய்த தனிப்பட்ட தியாகங்களின் காரணமாக அவர்களை நினைவுகூருகின்றோம். மேலும் அவர்களுக்கு கண்ணியம் வழங்குகின்றோம்.

(குத்பாதே மஹ்மூத், தொகுதி 27, பக்கம்-657)

அடுத்து, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அன்னார் (ரலி) மக்காவின் ஒரு சாதாரண வியாபாரியாக இருந்தார்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தோன்றாமல் இருந்து, மேலும் அந்நிலையில் மக்காவின் வரலாறு எழுதப்பட்டிருந்தால் அபூபக்ர் (ரலி) அரேபியாவின் ஒரு கண்ணியம் மிகுந்த, நேர்மையான வியாபாரியாக இருந்தார் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால், ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களை பின்பற்றியதன் காரணமாக இன்று முழு உலகமும் அன்னாரின் பெயரை கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நினைவுகூரும் அந்த அந்தஸ்து அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிடைத்துள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்துவிட்டபோது முஸ்லிம்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை தமது கலீஃபாவாகவும், அரசராகவும் ஆக்கிக் கொண்டனர். இந்த செய்தி மக்காவையும் சென்றடைந்தது. ஒரு சபையில் ஏராளமான மக்கள் அமர்ந்திருந்தனர். அவர்களுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தந்தை அபூகஹாஃபா அவர்களும் இருந்தார்கள். அபூபக்ருடைய கரங்களில் மக்கள் பைஅத் செய்துவிட்டனர் என்பதை அன்னார் கேட்டபோது அதை நம்புவது அன்னாருக்கு சாத்தியமற்றதாக ஆகிவிட்டது. நீங்கள் எந்த அபூபக்ரைக் குறிப்பிடுகின்றீர்கள்? என்று அன்னார் தகவல் கூறிய அந்த நபரிடம் கேட்டார்கள். உங்களுடைய மகனாகிய அதே அபூபக்ர் தான் என்று அவர் கூறினார். அன்னார், அன்னாரின் தந்தை, அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தந்தையாகிய அபூகஹாஃபா அரேபியாவின் ஒவ்வொரு கோத்திரத்தின் பெயரைக் கூறி அவர்களும் அபூபக்ரிடம் பைஅத் செய்துவிட்டார்களா? என்று கேட்கத் தொடங்கிவிட்டார்கள். பின்னர், இன்ன இன்ன பெரும் பெரும் கோத்திரங்களும் அபூபக்ரிடம் பைஅத் செய்துவிட்டனவா? என்று கேட்கத் தொடங்கினார்கள். அனைவரும் ஏகமனதாக அபூபக்ரை

கலீஃபாவாகவும், அரசராகவும் ஆக்கிவிட்டார்கள் என்று அவர் கூறியபோது

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

என்று அன்னார் மெய்மறந்து கூறினார்கள். பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன்.

மேலும் முஹம்மது இறைத் தூதரும் அவனது உண்மையான நபியும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன்.

கூறுகின்றார்கள்:

அன்னார் முன்னரே முஸ்லிம் ஆகிவிட்டர்கள். அபூகஹாஃபா மக்கா வெற்றிக்கு பிறகு அல்லது அதற்கு முன்னர் முஸ்லிமாக மாறியிருந்தார்கள். அன்னார் அந்தக் கலிமாவை அப்போது ஓதினார்கள். மேலும் இறைத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்தை மீண்டும் ஒப்புக் கொண்டார்கள். ஏனெனில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனபோது அன்னாரின் கண்கள் திறந்தன. மேலும், இது இஸ்லாத்தின் உண்மைக்கு ஒரு வலிமையான சான்று ஆகும். எனது மகனின் கரத்தில் முழு அரேபியாவும் ஒன்றுகூடுவதற்கு எனது மகனுக்கு என்ன தகுதி உள்ளது? என்பதை அன்னார் புரிந்தார்கள்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 205-206)

அடுத்து, ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது, இவர் மக்காவின் ஒரு தலைவராக இருந்தார். ஆனால் தற்போது இவர் இழிவடைந்துவிட்டார் என்று மக்கள் கூறத் தொடங்கிவிட்டனர். இருப்பினும், இஸ்லாத்திற்கு முன்னதாக அதிகபட்சமாக அன்னாருக்கு என்ன கண்ணியம் இருந்திருக்க முடியும்? இருநூறு அல்லது முந்நூறு நபர்கள் அன்னாரின் பெயரை கண்ணியத்துடன் கூறியிருப்பார்கள். ஆனால் இஸ்லாத்தின் பரக்கத்தால் அல்லாஹ் அன்னாருக்கு கிலாஃபத் மற்றும் அரசாட்சி எனும் அருளை வழங்கினான். மேலும், உலகம் முழுவதும் நிரந்தரமான கண்ணியம் மற்றும் முடிவில்லா பிரபல்யத்திற்கு சொந்தக்காரராக அல்லாஹ் அன்னாரை ஆக்கிவிட்டான்...........

ஒரு கோத்திரத்தின் தலைவர் என்ற அந்தஸ்து எங்கே? அனைத்து முஸ்லிம்களின் கலீஃபா மற்றும் ஈரானையும், ரோமையும் சண்டையிட்டு தோற்கடித்த அரேபிய பேரரசின் மன்னர் என்ற அந்தஸ்து எங்கே?

(தஃப்ஸீர் கபீர், தொகுதி 2, பக்கம் 87)

அடுத்து, ஓரிடத்தில் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

பாருங்கள்! ஆட்சி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில் மட்டுமே வந்து விழவில்லை. மாறாக, அன்னாரின் தொண்டர்களின் பாதங்களிலும் வந்து விழுந்தது. ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தமக்கு அரசாட்சி கிடைக்காமல் இருந்த அந்த நேரத்திலும் அதற்கு ஆசைப்படவில்லை. மேலும் ,தமக்கு அரசாட்சி கிடைத்த அந்த நேரத்திலும் அரசாட்சிக்கு அன்னார் (ஸல்) ஆசை கொள்ளவில்லை. அரசாட்சிக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஆசை கொள்ளவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஆசை கொள்ளவில்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் ஆசை கொள்ளவில்லை. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் ஆசை கொள்ளவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்கள் உலகின் மிகவும் வலிமை வாய்ந்த அரசர்களாக இருந்தனர். அவ்வாறு இருந்தபோதிலும் அவர்களிடம் அரசர் என்பதற்கான அடையாளங்கள் கூட இருக்கவில்லை. வரலாற்றில் அவர்களுக்கு நிகரான உதாரணமே கிடைக்கவில்லை. அவர்களின் இயல்புகளில் எளிமை இருந்தது. அவர்கள் மிக எளிமையாக மக்களைச் சந்தித்து வந்தனர். அந்த மக்களிடம் எந்த அளவிற்கு பணிவு காணப்பட்டதென்றால், அவர்கள் அரசர்கள் என்பதை வெளிப்படையாக கூட அறியமுடியாமல் இருந்தது. எனது ஆட்சி. நான் அரசன் என்று அவர்களில் ஒருவர் கூட கூறவில்லை. தமது அரசாட்சியை வெளிப்படுத்துவதற்கு அவர்களில் ஒருவர் கூட ஒருபோதும் துணியவில்லை. அந்த விஷயத்திற்கு அவர்கள் ஒருபோதும் ஆசைப்பட்டதுமில்லை.

உண்மை என்னவென்றால், எவர் இறைவனுக்காக ஆகிவிடுகின்றாரோ உலகம் தானாகவே அவரது காலடியில் வந்து விழுந்துவிடுகிறது. அரசாட்சிகளின் உதவி தங்களுக்கு கிடைக்கும் என்று மக்கள் கருதுகின்றனர். ஆனால், இறைவனுக்காக ஆகிவிடுகின்ற நபர்களுக்கு கீழ் இருப்பதால் கண்ணியம் கிடைக்கும் என்று அரசாட்சிகள் கருதுகின்றன.

(அல்லாஹ்வுடன் உண்மையான மற்றும் உறுதியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் நமக்கு வெற்றி உள்ளது. அன்வாருல் உலூம், தொகுதி 21, பக்கம் 99)

அடுத்து, ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பாருங்கள்! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அரசராக ஆகிவிட்டார்கள். ஆனால், அவர் அரசராகுவது சாத்தியமற்றதாகும் என்று அன்னாருடைய தந்தை கருதியிருந்தார்கள். ஏனெனில், இறைவன் புறமிருந்து அன்னாருக்கு அரசாட்சி கிடைத்திருந்தது. இதற்கெதிரில் தீமூர் என்பவரும் ஒரு பெரிய அரசனாக இருந்தார். ஆனால் அவர் தனது உலகியல் திட்டங்களின் காரணமாக அரசனாக ஆனார். நெப்போலியனும் ஒரு பெரிய அரசனாக இருந்தார். ஆனால் தனது உழைப்பு மற்றும் உலகியல் தந்திரங்களால் அவர் அரசனாக ஆகியிருந்தார். நாதிர்ஷா என்பவரும் பெரிய அரசனாக இருந்தார். ஆனால், அவருக்கும் அவரது சொந்த உழைப்பு, உலகியல் தந்திரங்களால் அரசாட்சி கிடைத்திருந்தது. எனவே அரசாட்சி அனைவருக்கும் கிடைத்தது. ஆனால், தீமோருக்கு அரசாட்சி மனிதர்கள் மூலமாக கிடைத்தது என்று நாம் கூறுவோம். ஆனால், அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அரசாட்சி இறைவன் புறமிருந்து கிடைத்தது. நெப்போலியனுக்கு அரசாட்சி உலகியல் தந்திரங்களால் கிடைத்தது என்று நாம் கூறுவோம். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இறைவனிடமிருந்து கிடைத்தது. சங்கீஸ்கானுக்கு அரசாட்சி உலகியல் வழிமுறைகள் மூலமாக கிடைத்தது என்று நாம் கூறுவோம். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு அரசாட்சி இறைவன் வழங்கினான். நாதிர்ஷா உலகியல் திட்டங்களால் அரசன் ஆனார் என்று நாம் கூறுவோம். ஆனால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு அரசாட்சியை இறைவன் வழங்கினான்.

எனவே அரசாட்சி அனைவருக்கும் கிடைத்தது. உலகியல் அரசர்களின் அதிகாரமும், ஆதிக்கமும் இருந்தது. அவர்களின் சட்டமும் நடைமுறையில் இருந்தது. கலீஃபாக்களின் சட்டமும் (நடைமுறையில் இருந்தது). ஆயினும் இவர்களைக் காட்டிலும் உலகியல் அரசர்களின் சட்டமும், அதிகாரமும் அதிகம் நடைமுறையில் இருந்தது.

இன்னும் கூறப்போனால், அவர்களின் சட்டம் அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி), அலி (ரலி) ஆகியோரைக் காட்டிலும் அதிகம் நடைமுறையில் இருந்தது. ஆனால் இவர்கள் அதாவது இந்த நால்வர் இறைவன் புறமிருந்து அரசராக நியமிக்கப்பட்டார்கள். ஆனால் உலகியல் அரசர்களாக இருந்த அவர்கள் மனிதர்களால் அரசரானார்கள். எனவே எந்த நபர் ஒரு முக்கிய பணியின்போது பிஸ்மில்லாஹ் ஓதுவதில்லையோ அவருக்கு பிஸ்மில்லாஹ்வின் அருட்கள் கிடைக்க

### நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

### திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

### திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

முடியாது என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதன் பொருள் அவர் தனது நோக்கத்தில் தோல்வியுறுவார் என்பதல்ல. மாறாக, அவருக்கு அந்த நோக்கம் இறைவன் புறமிருந்து கிடைக்க முடியாது என்பது அதன் பொருளாகும்.

அன்னார் (ஸல்) இங்கு பிஸ்மில்லாஹ்வின் அருட்களை எடுத்துரைக்கின்றார்கள். இறைவன் புறமிருந்து கிடைக்கக் கூடிய அரசாட்சி என்பது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோருக்கு கிடைத்தது. அவர்களை தவிர மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை. மற்றவர்களுக்கு கிடைத்த அரசாட்சி என்பது ஒன்று ஷய்த்தானிடமிருந்து கிடைத்தது அல்லது மனிதர்களிடமிருந்து கிடைத்தது. ஏனெனில், லெனின், ஸ்டாலின், மாலன்கூஃப் ஆகியோர் பிஸ்மில்லாஹ் ஓதவில்லை. ஆனால் அவர்களுக்கும் அரசாட்சி கிடைத்தது. ரூஸ் வேலட், டுரூமேன் மற்றும் ஆயிஸன் ஹாவர் ஆகியோரும் பிஸ்மில்லாஹ் ஓதவில்லை ஆனால், அவர்களுக்கும் அரசாட்சி கிடைத்தது. அவர்களுக்கு பிஸ்மில்லாஹ் என்றால் என்ன? என்பது கூட தெரியாது. மேலும், அவர்களின் உள்ளங்களில் பிஸ்மில்லாஹ்விற்கு எந்த மதிப்பும் இருக்கவில்லை. ஆக, பிஸ்மில்லாஹ் ஓதாமல் அருள் கிடைப்பதில்லை என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதன் பொருள், அவருக்கு இறைவன் புறமிருந்து எதுவும் கிடைப்பதில்லை என்பதாகும். எவர் ஒவ்வொரு பணிக்கு முன்னரும் பிஸ்மில்லாஹ் ஓதுகின்றாரோ அவருக்கு மட்டுமே இறைவன் புறமிருந்து அருள் கிடைக்கின்றது. இறைவன் புறமிருந்து கிடைக்கக்கூடிய விஷயம் அதிக அருளுக்குரியதாக இருக்குமா? அல்லது மனிதர்கள் புறமிருந்து கிடைக்கக்கூடிய விஷயம் அதிக அருளுக்குரியதாக இருக்குமா? என்பதை எல்லா மனிதராலும் புரிந்து கொள்ள முடியும். மனித தந்திரங்களால் பெறப்பட்ட அரசாட்சி தடைபட்டு விடவும் முடியும். ஆனால் இறைவனால் வழங்கப்பட்ட அரசாட்சி தடைபட்டு போக முடியாது.

அந்தோ! இந்த கருத்தை இன்று முஸ்லிம்கள் புரிந்திருக்க வேண்டுமே! அவர்கள் பிஸ்மில்லாஹ் ஓதுவும் செய்யலாம். ஆனால், அதுவும் வெறும் நாவினால் அதனை வெளிப்படையாக ஓதுவிடுகின்றார்களே தவிர, உள்ளத்தால் இல்லை என்று தெரிய வருகிறது.

அடுத்து, எழுதுகின்றார்கள்: யஸீதும் ஒரு மன்னனாக இருந்தான். அவனுக்கு எவ்வளவு ஆணவம் இருந்தது! அவன் வலிமை மிக்கவன் என்று எவ்வளவு வாதம் புரிந்தான்! அவன் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் குடும்பத்தினரை அழித்தான். வெளிப்படையில் தான் முஸ்லிம் என்றும் கூறி வந்தான். அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சந்ததிகளை கொலை செய்தான். மேலும், அவன் கழுத்தை தாழ்த்திக் கொண்டதில்லை. மிகவும் ஆணவம் கொண்டு வந்தான். எனக்கு முன்னால் எவரும் பேச முடியாது என்று கருதி வந்தான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அரசரானார்கள். ஆனால், அன்னாரிடம் பணிவு இருந்தது. தாழ்மை குணம் இருந்தது. மக்களுக்கு தொண்டாற்றுவதற்காக இறைவன் என்னை நியமித்துள்ளான். தொண்டாற்றுவதற்கு எவ்வளவு காலம் எனக்கு கிடைக்குமோ அது அவனது கருணையாகும் என்று அன்னார் (ரலி) கூறிவந்தார்கள்.

ஆனால், எனக்கு எனது தந்தையிடமிருந்து அரசாட்சி கிடைத்துள்ளது. நான் விரும்புபவரைக் கொன்றுவிடுவேன். நான் விரும்புபவரை உயிருடன் வைப்பேன் என்று யஸீத் கூறிவந்தான். வெளிப்படையில் யஸீத் தனது அரசாட்சியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட முன்னேறியிருந்தான்.

நான் குடும்ப அரசன் ஆவேன். எனக்கு முன்னால் பேசுவதற்கு எவருக்கு வலிமை உள்ளது? என்று அவன் கூறி வந்தான். ஆனால், அரசனாகுவதற்கு எனக்கு என்ன தகுதி இருந்தது. எனக்கு கொடுத்ததெல்லாம் இறைவனே கொடுத்தான். எனது வலிமையால் என்னால் அரசனாக முடியாது. நான் அனைவரின் சேவகன் ஆவேன். நான் ஏழைகளுக்கும் சேவகன் ஆவேன். செல்வந்தர்களுக்கும் சேவகன் ஆவேன். ஒருவேளை என்னிடமிருந்து ஏதாவது தவறு நிகழ்ந்துவிட்டால் அதற்கும் பழிவாங்கிக் கொள்ளுங்கள். கியாமத் நாளன்று என்னை சீர்கெடுத்து விட வேண்டாம் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் குறித்து கேட்கக்கூடிய ஒருவர், இது என்ன? அவருக்கு என்ன அந்தஸ்து கிடைத்திருந்தது? என்று கூட கூறலாம். அதேநேரம் யஸீதின் விஷயங்களை கேட்பவர் அவருடைய விஷயங்கள் அதாவது அரசாட்சி தொடர்பாக யஸீத் கூறும் விஷயங்கள் கைஸர் மற்றும் கிஸ்ராவின் விஷயங்களை போன்றவை என்று கூறக் கூடும். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணித்துவிட்டபோது பின்னர் அன்னாரின் மகன், அன்னாரின் மகன் வழிப் பேரன், மேலும் கொள்ளுப் பேரன் பின்னர் கொள்ளுப் பேரனின் மகன்கள் பின்னர் அவர்களுடைய சந்ததிகள் அதாவது அவர்களின் மகன்வழிப் பேரன் மற்றும் கொள்ளுப் பேரனுக்கான கேள்வியே எஞ்சியிருக்கவில்லை. அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களுடனான தங்களது உறவின் மீது பெருமிதம் கொண்டு வந்தனர். பின்னர் அவர்களையும் விட்டு விடுங்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைச் சார்ந்தவர்களாக வாதிடாத மக்களும், மேலும் அன்னாரின் குடும்பத்தையும் கூட ஒருபோதும் சந்தித்திராத மக்களும், அன்னாருடைய சம்பவங்களை படிக்கின்றபோது இன்றும் அவர்களின் கண்களில் கண்ணீர் வந்துவிடுகிறது. அவர்களின் அன்பு பொங்கி எழுகின்றது. அன்னார் (ரலி) அவர்களை பற்றி ஒருவர் தவறாக கூறிவிட்டால் அவர்களின் இரத்தம் கொதிக்கின்றது. சுருக்கமாக, சந்ததிகள் ஒருபக்கம் இருக்கட்டும். அந்நியர்களும் தமது உயிரை அன்னாருக்காக அர்ப்பணிப்பதற்கு தயாராகிவிடுகின்றனர். அன்னாருடைய பெயரை செவிமடுக்கும் கலிமாக் கூறக்கூடிய ஒவ்வொரு நபரும் ரலியல்லாஹு அன்ஹு (அல்லாஹ் அன்னார் மீது திருப்தி கொள்வானாக) என்று கூறுகின்றார். ஆனால் தன்னைத் தானே அரசனின் மகன் என்று கூறுவதில் சளைக்காத, பெருமையடிக்கக் கூடிய அந்த யஸீத் இறந்தபோது மக்கள் அவனது இடத்தில் அவனது மகனை அரசனாக அமர்த்தினார்கள். ஜுமுஆ நாள் வந்தது. அவர் மேடையின் மீது ஏறி நின்று, மக்களே! எனது தந்தை வழிப்பாட்டனாரை விட அரசாட்சிக்கு அதிக தகுதி படைத்த மக்கள் இருந்த அந்தநேரத்தில் அவர் அரசர் ஆனார். எனது தந்தையை விட அதிக தகுதி படைத்த மக்கள் இருந்த அந்தநேரத்தில் அவர் அரசர் ஆனார். என்னை விட அதிக தகுதி படைத்த மக்கள் இருக்கும்போது தற்போது நான் அரசன் ஆக்கப்பட்டுள்ளேன். மக்களே! என்னால் இந்த சுமையை சுமக்க முடியவில்லை. எனது தந்தை வழிப் பாட்டனாரும், எனது தந்தையும் தகுதி படைத்தவர்களின் உரிமையை அபகரித்துக் கொண்டனர். ஆனால், நான் அவர்களின் உரிமையை பறிக்க தயாராக இல்லை. உங்களது கிலாஃபத் இதோ இருக்கின்றது. நீங்கள் யாரை விரும்புகின்றீர்களோ அவருக்கு கொடுத்து விடுங்கள். நானும் இதற்கு தகுதி வாய்ந்தவன் கிடையாது. எனது தந்தை வழிப் பாட்டனாரையும், எனது தந்தையையும் இதற்கு தகுதி வாய்ந்தவர்களாக நான் கருதவுமில்லை. அவர்கள் கொடூரமான முறையிலும், அநீதியான முறையிலும் அரசாங்கத்தை அபகரித்துக் கொண்டனர். தற்போது நான் உரிமையுடையவர்களிடம் அவர்களுக்குரிய உரிமையை திருப்பி கொடுக்க விரும்புகின்றேன். இவ்வாறு கூறிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டார். அவரது தாய் இந்த சம்பவத்தைக் கேட்டபோது, முட்டாளே! நீ உனது பாட்டனார் மற்றும் தந்தையை இழிவுபடுத்திவிட்டாய் என்று கூறினார். அதற்கு, தாயே! இறைவன் உமக்கு அறிவை வழங்கியிருந்தால் நான் பாட்டனார் மற்றும் தந்தையை இழிவுபடுத்தவில்லை மாறாக, அவர்களின் கண்ணியத்தை நிலைநாட்டியுள்ளேன் என்பதை நீ புரிந்து கொள்வாய் என்று அவர் பதில் கூறினார். அதன் பிறகு, அவர் தனது வீட்டில் தனிமையில் சென்று அமர்ந்து கொண்டார். மரணிக்கும் வரை வீட்டை விட்டு வெளியேறவில்லை. (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 34, பக்கம், 86-88)

ஆக, இறைவன் புறமிருந்து கிடைக்கின்ற இந்த அரசாட்சிக்கும் அதற்குரிய உரிமை வழங்கப்படுகின்றது. இதிலும் நமது முஸ்லிம் தலைவர்களுக்கும், அரசர்களுக்கும் படிப்பினை உள்ளது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அடுத்து கூறுகின்றார்கள்:

இஸ்லாமிய தொண்டு மற்றும் மார்க்கத்திற்காக தியாகம் செய்த காரணத்தினால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)

அவர்களுக்கு இன்று கிடைத்திருக்கும் மகத்துவம் உலகின் பெரும் பெரும் மன்னர்களுக்கு கிடைத்துள்ளதா? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிடைத்துள்ள இவ்வளவு மகத்துவம் இன்று உலகின் அரசர்களில் ஒருவருக்கு கூட கிடைக்கவில்லை. இன்னும் கூறப்போனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒருபக்கம் இருக்கட்டும். முஸ்லிம்களின் பார்வையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஊழியர்களுக்கு எவ்வளவு மகத்துவம் கிடைத்துள்ளதோ அவ்வளவு மகத்துவம் பெரும் பெரும் அரசருக்கு கூட கிடைக்கவில்லை. இன்னும் கூறப்போனால், பெரும் பெரும் கண்ணியத்திற்குரியவர்களை விட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நாய் கூட எங்களுக்கு சிறந்ததாக தெரிகிறது என்பதே உண்மையாகும். ஏனெனில் அவர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வீட்டின் சேவகனாக திகழ்ந்தார்....

கூறுகின்றார்கள்:

அவர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வீட்டின் அடிமையாக ஆகிவிட்டபோது அவருடைய எல்லா பொருட்களும் எங்களுக்கு அன்பிற்குரியதாக ஆகிவிட்டது. எங்களது உள்ளங்களிலிருந்து அந்த மகத்துவத்தை எந்த நபராலும் அழிப்பது இனி சாத்தியமே கிடையாது. (குத்பாதே மஹ்மூத், தொகுதி 19, பக்கம்-681)

நவூதுபில்லாஹ் நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்துகின்றோம் என்று நம் மீது பழிசுமத்துகின்றனர். ஆனால் நமது எண்ணங்கள் இவையாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு மகன் கால தாமதமாக இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். ஒருமுறை அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சபையில் அமர்ந்திருந்தார்கள். மேலும், பல்வேறு விஷயங்கள் பேசப்பட்டுக் கொண்டிருந்தன. அப்போது அவர், உரையாடல்களுக்கு மத்தியில் தந்தையே இன்ன போர் சந்தர்ப்பத்தில் நான் ஒரு பாறையின் பின்னால் ஒளிந்திருந்தேன். தாங்கள் என் முன்னால் இரண்டு முறை கடந்து சென்றீர்கள். நான் அந்த நேரத்தில் விரும்பியிருந்தால் தங்களை கொன்றிருப்பேன். ஆனால், தாங்கள் எனது தந்தை ஆவீர்கள் என்ற காரணத்தால் நான் கையை உயர்த்தவில்லை என்று அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார். அதைக் கேட்டுவிட்டு, நான் உன்னை அந்த நேரத்தில் பார்க்கவில்லை. நீ இறைவனின் எதிரியாக போர் மைதானத்திற்கு வந்திருந்தாய். எனவே நான் உன்னை பார்த்திருந்தால் நான் நிச்சயமாக உன்னை கொன்றிருப்பேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (குத்பாதே மஹ்மூத், தொகுதி 16, பக்கம், 621-622)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உயர் நல்லொழுக்கங்களைக் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அபூபக்ர் (ரலி) எப்படிப்பட்ட நபர் என்றால், அவரது இயல்பில் நற்பேறு எனும் எண்ணெய்யும், திரியும் முன்னரே இருந்தன. அதாவது, அன்னாரிடத்தில் ஒளிர்வதற்கான ஆற்றல் இருந்தது. ஒளிமயமாகுவதற்கு ஆற்றல் இருந்தது. அதனால்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய போதனை அன்னாரை உடனடியாக தாக்கத்திற்குள்ளாக்கி ஒளிமயமாக்கிவிட்டது. அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் எந்த தர்க்கமும் செய்யவில்லை. எந்த அடையாளத்தையும், அற்புதத்தையும் வேண்டவில்லை. (வாதத்தை) செவியுற்ற உடன் தாங்கள் நபித்துவ வாதம் புரிகின்றீர்களா? என்று மட்டுமே அன்னார் கேட்டார்கள். ஆம்! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது, நான் எல்லாரையும் விட முதலில் ஈமான் கொள்கின்றேன். தாங்கள் சாட்சியாக இருங்கள் என்று உடனடியாக கூறிவிட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

கேள்வி கேட்பவர்கள் மிகக் குறைவாகவே நேர் வழி பெறுகின்றனர் என்று அனுபவத்தில் பார்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், நல்லெண்ணம் மற்றும் பொறுமையுடன் செயல்படக்கூடியவர்கள் நேர்வழியிலிருந்து முழுமையாக பங்கு பெறுகின்றனர். இதற்கான உதாரணம் அபூபக்ர் (ரலி) மற்றும் அபூஜஹில் ஆவர். அபூபக்ர் (ரலி) தர்க்கம் செய்யவுமில்லை. அடையாளம் வேண்டவுமில்லை. ஆனால், அடையாளம் வேண்டுபவர்களுக்கு கிடைக்காத விஷயம் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் அடையாளத்திற்கு மேல் அடையாளத்தைக் கண்டார். அதுமட்டுமல்ல அவர் சுயமே ஒரு மகத்துவமிக்க அடையாளமாகிவிட்டார். அபூஜஹில் தர்க்கம் செய்தான். அறிவீனத்திலிருந்து விலகவில்லை. அவன் அடையாளத்திற்கு மேல் அடையாளத்தைக் கண்டான். ஆனால் அவனால் பார்க்க முடியவில்லை. இறுதியில், மற்றவர்களுக்கு அடையாளமாக மாறி, எதிர்ப்பிலேயே அழிந்து போனான். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம்-165, பதிப்பு 1984)

பின்னர், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மக்காவின் மண் ஒன்றாகவே இருந்தது. அதில்தான் அபூபக்ர் (ரலி) அவர்களும், அபூஜஹிலும் பிறந்தனர். தற்போது எந்த மக்காவில் எல்லாப் பிரிவு மற்றும் படித்தரங்களையும் கொண்ட கோடிக்கணக்கான மனிதர்கள் உலகின் எல்லா பகுதியிலிருந்தும் ஒன்று கூடுகின்றார்களோ அது இதே மக்கா தான். இதே மண்ணில் தான் இரு மனிதர்களும் பிறந்தனர். அதில் முதலில் குறிப்பிடப்பட்ட நபர் தமது நற்பேறு மற்றும் நன்மையின் காரணமாக நேர்வழிப் பெற்று ஸித்தீக்குகளின் சிறப்பை பெற்றுவிட்டார். இரண்டாம் நபர், தீங்கு, அறிவீனம், பொருத்தமற்ற பகைமை மற்றும் உண்மைய எதிர்ப்பதில் பிரபல்யமானவன் ஆவான்.

நினைவிற் கொள்ளுங்கள்! சிறப்புகள் இரண்டே வகைப்படும். ஒன்று ரஹ்மானி, இரண்டாவது ஷய்த்தானி.

ரஹ்மானிய சிறப்புகளை பெற்ற நபர் விண்ணில் ஒரு பிரபல்யத்தையும், கண்ணியத்தையும் பெறுகின்றார். அதேபோன்று ஷய்த்தானிய சிறப்புகளைக் கொண்ட நபர் ஷய்த்தான்களின் சந்ததிகளில் பிரபல்யம் பெறுகின்றார்.

சுருக்கமாக, ஒரே இடத்தில் இரண்டு தன்மைகள் இருந்தன. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எவரிடமும் எந்த வேறுபாடும் காட்டவில்லை. அல்லாஹ்விடமிருந்து என்னவெல்லாம் கட்டளை கிடைத்ததோ அவை அனைத்தையும் அனைவருக்கும் சரிசமமாக எட்ட வைத்தார்கள். ஆனால், நற்பேறு இழந்தவரும், துர்பாக்கியம் கொண்டவரும் இழப்பிற்குரியவராக ஆகிவிட்டார். மேலும், நற்பேறு பெற்றவர் நேர்வழிப் பெற்று முழுமையானவராகிவிட்டார். அபூஜஹில் மற்றும் அவனது கூட்டாளிகள் நூற்றுக் கணக்கான அடையாளத்தைக் கண்டனர். ஒளிகளையும், அருட்களையும் கண்களால் கண்டனர். ஆனால், அவர்களுக்கு எந்தப் பயனும் அளிக்கவில்லை. (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 164, பதிப்பு 1984)

அடுத்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பாருங்கள்! புனித மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றியபோது, அபூஜஹிலும் மக்காவில் தான் இருந்தான். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களும் மக்காவிலேயே இருந்தார்கள். ஆனால், அபூபக்ர் (ரலி) அவர்களின் இயல்பு உண்மையை ஒப்புக் கொள்வதற்கு எவ்வளவு பொருத்தமானதாக இருந்தது என்றால், அப்போது அன்னார்(ரலி) நகரத்திற்குள் நுழைந்திருக்க கூட இல்லை. ஏதாவது புதிய செய்தி உள்ளதா? என்று ஒருவரை வழியில் சந்தித்தபோது அன்னார் (ரலி) அவரிடம் கேட்டார்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் நபித்துவ வாதம் செய்துள்ளார் என்று அந்த நபர் கூறினார். அப்போது அன்னார் (ரலி) அந்த இடத்திலேயே ஈமான் கொண்டுவிட்டார்கள். எந்த ஓர் அடையாளத்தையும், அற்புதத்தையும் அன்னார் (ரலி) வேண்டவில்லை. அதன் பிறகு, பிற்காலத்தில் எண்ணற்ற அற்புதங்களையும் அன்னார் (ரலி) கண்டார்கள். அன்னார் (ரலி) சுயமே ஓர் அடையாளமாகிவிட்டார்கள். ஆனால் ஆயிரக்கணக்கான அடையாளங்களை அபூஜஹில் பார்த்தபோதிலும் அவன் எதிர்ப்பு மற்றும் நிராகரிப்பிலிருந்து விலகவில்லை. மேலும், மேலும் பொய்படுத்திக் கொண்டே இருந்தான்.

இதில் என்ன இரகசியம் இருந்தது? என்ன நுட்பம் இருந்தது? இருவருமே ஒரே இடத்தில்தான் பிறந்தார்கள். ஒருவர் ஸித்தீக் ஆகிவிட்டார். மேலும், அபுல் ஹகம் (அறிவின் தந்தை) என்று அழைக்கப்பட்டு வந்த இரண்டாம் நபரோ அபூஜஹைல் (அறிவீனத்தின் தந்தை) ஆகிவிட்டான். இதில் உள்ள இரகசியம் என்னவென்றால், அவனது இயல்பிற்கு உண்மையுடன் எந்த பொருத்தமுமே இருக்கவில்லை. சுருக்கமாக, ஈமானிய விவகாரங்கள் பொருத்தங்களை சார்ந்தே உள்ளன. பொருத்தம் இருக்கும்போது அது சுயமே ஆசிரியராக ஆகிவிடுகின்றது. மேலும் உண்மையான விவகாரங்களை போதிக்கின்றது. இதன்

காரணமாகவே பொருத்தங்களை கொண்டவர்களின் இருப்பும் ஓர் அடையாளமாகிவிடுகிறது. (மல்பூஸாத், தொகுதி 5, பக்கம் 11-12, பதிப்பு 1984)

அடுத்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஸித்தீக், ஃபாரூக், உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோர், நல்லவர்களாகவும், நம்பிக்கையாளர்களாகவும் இருந்தனர் என்பதை எனது இறைவன் எனக்கு வெளிப்படுத்தியுள்ளான். அல்லாஹ் அவர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டான். மேலும், அவர்கள் ரஹ்மான் எனும் இறைவனின் அருட்கொடைகளால் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான இறைஞானம் பெற்ற சகோதரர்கள் அவர்களின் சிறப்புகளுக்கு சாட்சியம் வழங்கியுள்ளனர். அந்த சான்றோர்கள் உயர்வான இறைவனின் திருப்திக்காக தேசத்தை துறந்தனர். ஒவ்வொரு போரினுடைய மையப்பகுதியிலும் உள்ளே நுழைந்தனர். அவர்கள் கோடைகாலத்தின் மதியவேளை வெப்பத்தையும், குளிர்காலத்தின் இரவின் குளிரையும் பொருட்படுத்தவே இல்லை. இன்னும் கூறப்போனால், இளைஞர்களைப் போன்று மார்க்கத்தின் வழிகளில் முற்றிலும் மூழ்கிவிட்டார்கள். மேலும் தம்மவர்கள் மற்றும் அந்நியர்களின் பக்கம் சாயவில்லை. ரப்புல் ஆலமீனான அல்லாஹ்விற்காக எல்லாவற்றிற்கும் விடை கொடுத்து விட்டார்கள். அவர்களின் அமல்களில் நறுமணமும், அவர்களின் செயல்களில் வாசமும் உள்ளது. இவை அனைத்தும் அவர்களின் அந்தஸ்துகள் எனும் தோட்டங்களின் பக்கமும், அவர்களின் நன்மைகள் எனும் பூங்காக்களின் பக்கம் வழிகாட்டுகின்றன. அவர்களின் வசந்தகால காற்று தனது நறுமணம் மிக்க இரகசியங்களை அறிவித்துக் கொடுக்கின்றது. அவர்களின் ஒளிகள் தனது முழுமையான கதிர்களுடன் நம் மீது வெளிப்படுகின்றன. (சிர்ருல் குலஃபா, மொழியாக்கம், பக்கம்,25-26)

பின்னர் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ்வின் இரண்டு சான்றோர்களையும் (அதாவது அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) அவர்களையும்), மூன்றாவதாக துன் நூரைன் (அதாவது இரு ஒளிகளைக் கொண்டவரான ஹஸ்ரத் உஸ்மான் (ரலி)) அவர்களையும் இஸ்லாத்தின் வாசல்கள் மற்றும் படைப்பினங்களில் சிறந்தவரான முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அனைத்து படையின் முதன்மைப் பிரிவினராக ஆக்கப்பட்டுள்ளனர். எனவே, எந்த நபர் அவர்களின் மகத்துவத்தை நிராகரிக்கின்றாரோ, அவர்களின் உறுதியான சான்றுகளை ஏளனத்துடன் பார்க்கின்றாரோ, மேலும் அவர்களுடன் மரியாதையுடன் நடந்து கொள்வதில்லையோ இன்னும் கூறப்போனால், அவர்களை இழிவுபடுத்தியும், அவர்களை ஏசிபேசுவதிலும் மும்முரமாக இருக்கின்றாரோ, மேலும் அவர்களுக்கு எதிராக அதிகம் பேசுகின்றாரோ அத்தகைய நபர் தீய முடிவை அடைவார் என்றும் அவரது ஈமான் வீணாகிவிடும் என்றும் எனக்கு அச்சம் உள்ளது.

எந்த மக்கள் அவர்களுக்கு துன்பம் கொடுத்தார்களோ, மேலும் சாபமிட்டார்களோ, பழிசுமத்தினார்களோ, அத்தகைய நபர்களுக்கு கடுமையான உள்ளமும், ரஹ்மான் எனும் இறைவனின் கோபமும் அவர்களின் முடிவாக ஆகிவிட்டது என்பது எனது பலமுறை அனுபவம் ஆகும். மேலும் நான் அதனை தெளிவாகவும் வெளிப்படுத்தியுள்ளேன். இந்த நற்பேறு பெற்ற மக்களுடன் பகைமையும், காழ்ப்புணர்ச்சியும் கொள்வது அருட்களை வெளிப்படுத்தக் கூடிய அல்லாஹ்விடமிருந்து மிக அதிகமாக தொடர்பை துண்டிப்பதற்கு காரணி ஆகும். எவரெல்லாம் அவர்களுடன் பகைமை கொண்டனரோ அவர் மீது கருணை மற்றும் பரிவிற்கான அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டுவிடுகின்றன. அத்தகைய நபருக்கு அறிவு மற்றும் ஞானத்தின் வாசல்கள் திறந்து கொடுக்கப்படுவதில்லை. (சிர்ருல் குலஃபா மொழியாக்கம், பக்கம் 28-29)

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எவரது வாதத்தை அல்லாஹ் நிரூபித்துவிட்டானோ அத்தகைய நபர் மீது நீங்கள் எப்படி சாபமிடுகின்றீர்கள்?

சில மக்களும், சில பிரிவினரும், தவறான சொற்களை பயன்படுத்துகின்றனர்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எவரது வாதத்தை அல்லாஹ் நிரூபித்துவிட்டானோ அத்தகைய நபரை நீங்கள் எப்படி சபிக்கின்றீர்கள்? அவர் அல்லாஹ்விடம் உதவி வேண்டியுள்ளார். மேலும், அல்லாஹ்வும் அவருக்கு உதவி செய்தான். மேலும், அவரது உதவிக்கான அடையாளங்களை காட்டியுள்ளான். தீயபார்வையுடையவர்களின் தந்திரங்களை தூள் தூளாக்கிவிட்டான். அன்னார் (அதாவது அபூபக்ர் (ரலி) அவர்கள்) இஸ்லாத்தை தோற்கடிக்கச் செய்யக்கூடிய சோதனைகளிலிருந்தும், அநீதியிழைக்கும் கூட்டங்களிடமிருந்தும் காப்பாற்றினார்கள். மேலும் தீண்டக்கூடிய பாம்பை அழித்து விட்டார்கள். மேலும் அன்னார் அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டினார்கள். அகில உலகங்களின் இறைவனாகிய அல்லாஹ்வின் அருளினால் ஒவ்வொரு கிளர்ச்சியாளரையும் தோற்கடித்துவிட்டார்கள். ஹஸ்ரத் (அபூபக்ர்) ஸித்தீக் (ரலி) அவர்களுடைய இன்னும் ஏராளமான சிறப்புகளும், கணக்கற்ற, எல்லையற்ற அருட்களும் உள்ளன. எவர் முதல்தர அநீதியிழைக்கக்கூடியவராக இருப்பாரோ அவரால் மட்டுமே இந்த விஷயத்தை நிராகரிக்க முடியும்.

நம்பிக்கையாளர்களுக்கு அன்னாரை அமைதிக்கான காரணியாகவும், முர்தத்கள் மற்றும் நிராகரிப்பாளர்களின் நெருப்பை அணைக்கக் கூடியவராகவும் அல்லாஹ் எவ்வாறு ஆக்கினானோ அதேபோன்று அன்னாரை உயர் தரமான சான்றுகளைக் கொண்டவராகவும், திருக்குர்ஆனின் தொண்டராகவும் மேலும், தெளிவான வேதத்தை பரப்புபவராகவும் ஆக்கியுள்ளான். எனவே அன்னார் (ரலி) திருக்குர்ஆனை ஒன்றுகூட்டுவதிலும், ரஹ்மான் எனும் இறைவனின் நேசரான முஹம்மது (ஸல்) அவர்கள் புறமிருந்து எடுத்துரைக்கப்பட்ட வரிசைக்கிரமத்தை தேடுவதில் முழுமையான முயற்சிகளை செய்தார்கள். மார்க்கத்தின் வேதனையில் அன்னாரின் கண்கள், நீருற்று பெருக்கெடுத்து ஓடுவதைக் காட்டிலும் அதிகமாக கண்ணீர் சிந்தின. (சிர்ருல் குலஃபா மொழியாக்கம், பக்கம் 57-58)

அடுத்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஷியா சகோதரர்கள், அதாவது சில ஷியாப் பிரிவைச் சார்ந்த மக்கள் உள்ளனர். அவர்கள் இந்த விஷயங்களை ஒப்புக் கொள்கின்றனர். அதாவது, (ஹஸ்ரத்) அபூபக்ர் ஸித்தீக் (ரலி) எதிரிகள் அதிகமாக இருந்த நாட்களில் ஈமான் கொண்டார்கள். மேலும், அன்னார் (ரலி) சோதனையின் கடுமையான நேரத்தில் (ஹஸ்ரத் முஹம்மது) முஸ்தஃபா (ஸல்) அவர்களின் தோழமையை மேற்கொண்டார்கள். மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் (மக்காவிலிருந்து) வெளியேறியபோது அன்னாரும் சிறப்பிற்குரிய உண்மை மற்றும் நன்றியுடன் ஹுஸூர் (ஸல்) அவர்களின் தோழமையில் புறப்பட்டுச் சென்றார்கள். துன்பங்களை சகித்துக் கொண்டார்கள். அன்பிற்குரிய தேசத்தையும், நண்பர்களையும், சகோதரர்களையும், மற்றும் தமது முழுக் குடும்பத்தையும் விட்டுச் சென்றார்கள். நுட்பமான ஞானம் கொண்ட இறைவனின் வழி நடந்தார்கள். அடுத்து, அனைத்து போர்களிலும் அன்னார் (ரலி) கலந்து கொண்டார்கள். நிராகரிப்பாளர்களுடன் போரிட்டார்கள். மேலும், (அஹ்மது) நபி (ஸல்) அவர்களுக்கு உதவி செய்தார்கள். அடுத்து, நயவஞ்சகர்களின் ஒரு கூட்டம் முர்தத் ஆகிவிட்டபோதும், ஏராளமான பொய்யர்கள் நபித்துவ வாதம் செய்த போதும் அன்னார் (ரலி) கலீஃபா ஆனார்கள். அதனால் அவர்களுடன் அன்னார் (ரலி) போரும் புரிந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் நாட்டில் மீண்டும் அமைதியும், பாதுகாப்பும் நிலைபெற்றுவிட்டது. மேலும் குழப்பவாதிகளின் கூட்டம் தோல்வியையும், பாதிப்பையும் அடைந்தது.

பின்னர், அன்னார் (ரலி) மரணமடைந்தார்கள். மேலும் ஸய்யதுல் அன்பியா மற்றும் அப்பழுக்கற்றவர்களின் இமாம் (ஸல்) அவர்களின் கபருக்கு அருகில் அன்னார் (ரலி) நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். மேலும், இவ்வுலக வாழ்விலும், மரணத்திற்கு பிறகும் இறைவனின் நேசத்திற்குரியவர் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து அன்னார் (ரலி) பிரிந்துவிடவில்லை. ஒருசில நாட்கள் பிரிவிற்கு பிறகு ஒருவருக்கொருவர் சேர்ந்து கொண்டனர். அன்பு பரிசை வழங்கினார்கள். அதாவது, (ஷியா

சகோதரர்களாகிய) அவர்களின் கூற்றுப்படி, அதாவது ஆட்சேபனை செய்யக்கூடியவர்களின் கூற்றுப்படி, அல்லாஹ் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களை இரண்டு நிராகரிப்பாளர்கள், இரண்டு அநீதியாளர்கள் மற்றும் இரண்டு நம்பிக்கை துரோகிகளுக்கு மத்தியில் இணைத்துக் கொண்டுவிட்டான். மேலும், தனது நபி மற்றும் நேசர் (ஸல்) அவர்களுக்கு (அபூபக்ர் (ரலி), மற்றும் உமர் (ரலி) என்ற) அந்த இருவரின் தோழமையின் வேதனையிலிருந்து (மரணத்திற்கு பிறகும்) இரட்சிப்பு வழங்கவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்கள் இருவரையும் இவ்வுலகிலும், மறுமையிலும் துன்பம் கொடுக்கக்கூடிய தோழர்களாக ஆக்கி விட்டான். (நவூதுபில்லாஹ்) அந்த இரு அசுத்தமானவர்களிடமிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விலக்கி வைக்கவில்லை.

அவர்கள் கூறுகின்ற விஷயங்களிலிருந்து நமது இறைவன் தூயவன் ஆவான். (ஷியாக்களாகிய) அவர்கள் கூறுகின்ற இந்த விஷயங்கள் தவறானவை ஆகும். அந்த விஷயங்கள் அவர்கள் கூறுகின்றது போன்று கிடையாது. மாறாக, அல்லாஹ் அந்த இரு பரிசுத்தவான்களை அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) என்ற அந்த இரு பரிசுத்தமானவர்களை பரிசுத்தவான்களின் இமாம் (ஸல்) அவர்களுடன் இணைத்துவிட்டான். நிச்சயமாக, அகப்பார்வை கொண்ட மக்களுக்கு இதில் அடையாளங்கள் உள்ளன. (சிர்ருல் குலஃபா மொழியாக்கம், பக்கம் 72-73)

அடுத்து, காழ்ப்புணர்ச்சி கொண்ட ஷியாக்களைக் குறித்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நிராகரிப்பாளர்களின் கூட்டத்திலிருந்து வெளியேறி, பருவமடைந்த ஆண்களில் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் யார்? என்று அந்த காழ்ப்புணர்ச்சிக் கொண்ட ஷியாக்களிடம் கேட்கப்பட்டால், அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களாக இருந்தார்கள் என்று கூறுவதை தவிர அவர்களுக்கு வேறு வழியே கிடையாது.

அடுத்து, ஹஸ்ரத் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களுடன் முதல் முதலில் ஹிஜ்ரத் செய்து, அனைத்து தொடர்புகளையும் தூக்கி எறிந்துவிட்டு ஹுஸுர் (ஸல்) அவர்கள் எங்கு சென்றார்களோ அங்கு சென்ற அந்த நபர் யாராக இருந்தார்? என்று கேட்கப்பட்டால், அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களாக இருந்தார்கள் என்று கூறுவதை தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்காது. அடுத்து, அநீதியாளராக இருந்தார் என்று ஒரு கற்பனைக்காக வைத்துக் கொள்வோம். ஆனால், கலீஃபாவாக ஆக்கப்பட்டவர்களில் எல்லாரையும் விட முதன்மையானவராக யார் இருந்தார்? என்று அவர்களிடம் கேட்கப்பட்டால், அபூபக்ர் என்று கூறுவதை தவிர அவர்களுக்கு வேறு வழி கிடையாது. அடுத்து, நாடு, நாடாக பரப்புவதற்காக திருக்குர்ஆனை ஒன்றுகூட்டியவர் யாராக இருந்தார்? என்று கேட்கப்படும்போது அவர்கள் தயங்காமல் அவர் (ஹஸ்ரத்) அபூபக்ர் (ரலி) ஆவார் என்று கூறுவார்கள். அடுத்து கய்ருல் முர்ஸலீன் மற்றும் ஸய்யதுல் மஃஸூமீன் (ஸல்) அவர்களுக்கு அருகில் யார் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்? என்று கேட்கப்படும்போது, அவர்கள், அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) ஆவார்கள் என்று கூறுவதை தவிர வேறு வழி கிடையாது.

அவ்வாறிருக்க (அல்லாஹ் காப்பானாக) எல்லா அருட்களும், நிராகரிப்பாளர்களுக்கும், நயவஞ்சகர்களுக்கும் கொடுக்கப்பட்டுவிட்டது என்பதும், இஸ்லாத்தின் அனைத்து நன்மைகளும், அருட்களும் எதிரிகளின் கரங்களால் வெளிப்பட்டது என்ற இந்த விஷயமும் எவ்வளவு ஆச்சரியத்திற்குரியதாக உள்ளது!

இஸ்லாத்திற்காக முதல் செங்கலாக இருந்த அந்த நபர் நிராகரிப்பாளராகவும், சாபத்திற்குரியவராகவும் இருந்தார் என்று ஒரு நம்பிக்கையாளரால் கருத முடியுமா? அடுத்து, எவர் தூதர்களில் சிறந்தவர் (ஸல்) அவர்களுடன் முதன் முதலில் ஹிஜ்ரத் செய்தாரோ அவர் ஈமான் அற்றவராகவும், முர்தத் ஆகவும் இருந்தாரா? அவ்வாறென்றால், அனைத்து அருட்களும் நிராகரிப்பாளர்களுக்கு கிடைத்துவிட்டதே. எந்த அளவுக்கு என்றால் நல்லடியார்களின் தலைவர் (ஸல்) அவர்களின் கப்ரின் அருகாமையும் கூட! (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோருக்கே கிடைத்துள்ளது). (சிர்ருல் குலஃபா மொழியாக்கம், பக்கம் 75-76)

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

(அபூபக்ர்) ஸித்தீக் (ரலி), (உமர்) ஃபாரூக் (ரலி) ஆகிய இருவரும் மாபெரும் ஸஹாபிகளைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதே உண்மையாகும். அவர்கள் இருவரும் உரிமைகளை செலுத்துவதில் எந்தக் குறையும் வைக்கவில்லை. அவர்கள் இறையச்சத்தை தங்களது வழியாகவும், நீதியை தங்களது நோக்கமாகவும் ஆக்கிக் கொண்டார்கள். சூழ்நிலைகளை ஆழமாக ஆய்வு செய்து இரகசியங்களின் அடி வரை சென்றடைந்துவிடுவார்கள். உலக ஆசைகளை அடைவது அவர்களின் நோக்கமாக ஒருபோதும் இருந்ததில்லை. அவர்கள் தங்களது ஆன்மாக்களை அல்லாஹ்விற்கு கட்டுப்படுவதில் (முற்றிலுமாக) ஈடுபடுத்தி வைத்திருந்தார்கள். அருட்கொடைகளை மிகுதியாக பெற்றவர் மற்றும் ஈருலக நபி (ஸல்) அவர்களின் மார்க்கத்திற்கு உதவி செய்ததிலும் (அபூபக்ர் மற்றும் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) என்ற) அந்த இரு சான்றோர்களைப் போன்று நான் வேறு எவரையும் காணவில்லை. சமுதாயங்கள் மற்றும் இனங்களின் கதிரவன் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் நிலவை விடவும் அதிவேகமாக அந்த இருவரும் செயல்பட்டு வந்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) மீதான நேசத்தில் தங்களை மாய்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் உண்மையை அடைவதற்காக அனைத்து துன்பங்களையும் இனிமையானதாக கருதினார்கள். அந்த நிகரற்ற நபிக்காக அனைத்து இழிவையும் விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் ஒப்புக் கொண்டார்கள். நிராகரிப்பாளர்கள் மற்றும் கிளர்ச்சியாளர்களின் படைகள் மற்றும் குழுக்களுடனான ஒவ்வொரு மோதலின் நேரத்திலும் சிங்கங்களைப் போன்று முன்னால் வந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் இஸ்லாம் வெற்றி பெற்றுவிட்டது. மேலும், எதிரிகளின் கூட்டம் தோல்வியைக் கண்டது. இணை வைத்தல் அழிந்தது. மேலும் அதற்கு முடிவு கட்டப்பட்டது. மேலும் சமயம் மற்றும் மார்க்கத்தின் சூரியன் மிகவும் பிரகாசமாக ஒளிவீசத் தொடங்கியது. ஒப்புக் கொள்ளப்பட்ட மார்க்கத் தொண்டுகளை ஆற்றியவாறும், முஸ்லிம்களின் கழுத்துகளை இன்பம் மற்றும் கருணையின் கீழ் கொண்டு வந்தவாறும் அந்த இருவரின் முடிவு தூதர்களில் சிறந்தவரின் அருகாமையில் சென்று நிறைவடைந்தது.

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

……அல்லாஹு அக்பர்! (அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) ஆகிய) அந்த இருவரின் உண்மையும், தூய்மையும் எவ்வளவு உயரிய அந்தஸ்து கொண்டதாக உள்ளது! அவ்விருவரும் எப்படிப்பட்ட (அருளுக்குரிய) மண்ணறையில் நல்லடக்கம் ஆகியுள்ளார்கள் என்றால், ஒருவேளை மூஸாவும், ஈஸாவும் உயிருடன் இருந்திருந்தால் அங்கு நல்லடக்கம் ஆகுவதற்கு மிக அதிகமாக ஏக்கம் கொண்டிருப்பார்கள். ஆனால், இந்த அந்தஸ்து வெறும் ஆசைப்படுவதால் கிடைக்க முடியாது. மேலும் விருப்பம் கொள்வதால் மட்டும் அது வழங்கப்பட மாட்டாது. மாறாக, இது கண்ணியத்திற்குரிய இறைவனின் சன்னிதானத்திலிருந்து கிடைக்கும் ஒரு நிரந்தரமான கருணையாகும். (சிர்ருல் குலஃபா மொழியாக்கம், பக்கம் 77-78, ரூஹானீ ஹஸாயீன் தொகுதி 8, பக்கம் 345-346)

இன்ஷா அல்லாஹ் இன்னும் சில பகுதிகளும், ஆதாரங்களும் உள்ளன. பின்னர் எடுத்துரைக்கப்படும் இன்ஷா அல்லாஹ்.

தமிழாக்கம் :
மவ்லவி **A.** அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

**KHAIRUL-ISLAM**
**JAYGON-WEST BENGAL** 97348 44732

## முதல் பக்கத் தொடர்ச்சி

### கொடியேற்றம்

மதிப்பிற்குரிய ஸத்ர் ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா மவ்லானா கரீமுத்தீன் சாஹிப் ஷாஹித் அவர்கள் காலை சரியாக 10 மணிக்கு அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றினார்கள். பின்னர் கூட்டுத் துஆ செய்து வைத்தார்கள்.

### துவக்க அமர்வு

மதிப்பிற்குரிய ஸத்ர் ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா மவ்லானா கரீமுத்தீன் சாஹிப் ஷாஹித் அவர்களின் தலைமையில் துவக்க அமர்வு நடைபெற்றது. காஷ்மீரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய தாரிக் அஹ்மது லோன் சாஹிப் திருக்குர்ஆன் திலாவத் செய்தார்கள். சூரா அஸ் ஸஃப்பின் வசனங்கள் 7 முதல் 10 வரை திலாவத் செய்தார்.

அதன் பிறகு மதிப்பிற்குரிய சத்ர் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா மவ்லானா கரீமுத்தீன் சாஹிப் ஷாஹித் துவக்கவுரை நிகழ்த்தினார்கள். அதன் பிறகு மதிப்பிற்குரிய நாயிப் நாஸிர் நஷ்ரோ இஷாஅத் காதியான் தன்வீர் அஹ்மது சாஹிப் நாஸிர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கவிதை வரிகளை அழகிய குரலில் பாடினார்கள். இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய நாஸிர் சாஹிப் ஆஃலா மவ்லானா முஹம்மது இனாம் சாஹிப் கௌரி அவர்கள், அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் அன்னாருடைய அழகிய முன்மாதிரிகள் என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள். அதன் பிறகு மவ்லானா முனீர் அஹ்மது சாஹிப் காதிம் அடிஷனல் நாஸிர் இஸ்லாஹ் வ-இர்ஷாத் தென் இந்தியா, அவர்கள் அல்லாஹ்வின் மீதான நிச்சய உறுதி மற்றும் துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் என்ற அம்சத்தின் ஒளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

### முதல் நாளின் இரண்டாம் அமர்வு

முதல் நாளின் இரண்டாம் அமர்வு சரியாக பிற்பகல் 2.05 மணியளவில் துவங்கியது. சத்ர் மஜ்லிஸ் தஹ்ரீகே ஜதீத் காதியான் மதிப்பிற்குரிய ஜலாலுத்தீன் சாஹிப் நய்யர் அவர்கள் தலைமையில் துவங்கியது. மதிப்பிற்குரிய முஹம்மது இப்ராஹீம் சாஹிப் சூரா தவ்பாவின் வசனங்கள் 100 முதல் 103 வரை திலாவத் செய்தார்கள். கட்டுமானத் துறை காதியான் அலுவலகத்தின ஊழியர் மதிப்பிற்குரிய அப்துல் வாஸிஃ சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய கவிதை வரிகளிலிருந்து சில வரிகளை மிகவும் அழகிய குரலில் படித்தார்கள்.

இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய சத்ர் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா மவ்லானா கரீமுத்தீன் சாஹிப் ஷாஹித் அவர்கள் இறையிருப்பும், இறை ஞானத்தைப் பெறுவதற்கான வழிமுறைகளும் என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள். அதன் பிறகு இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லவி ஃபிரோஸ் அஹ்மது நயீம் சாஹிப் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் வாழ்க்கை மற்றும் ஹஸ்ரத் ஹகீம் நூருத்தீன் (ரலி) அவர்களின் வாழ்க்கை என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள். அதன் பிறகு, மதிப்பிற்குரிய சிரியாவின் ஜமாஅத் தலைவர் அரபி மொழியில் அறிமுக உரை நிகழ்த்தினார்கள். அதன் மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய மவ்லானா ஸைனுத்தீன் சாஹிப் ஹாமித் எடுத்துரைத்தார்கள்.

இந்த அமர்வின் கடைசி சொற்பொழிவை மதிப்பிற்குரிய ஹாஃபிழ் மக்தூம் ஷரீஃப் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் ஒளியில் என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள். அதன் பிறகு அமர்வின் தலைவரின் அனுமதியுடன் முதல் நாளின் இரண்டாம் அமர்வு நிறைவு பெற்றது. இந்தியநேரம் மாலை சரியான 6.30 மணியளவில் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ குத்பா நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. அனைத்து பள்ளிவாசல்களிலும் ஆண்கள் ஒன்றாக அமர்ந்து ஹுஸுர் குத்பாவைக் கேட்டனர். வீடுகளிலும் ஜமாஅத் சகோதரர்கள் குத்பாவைக் கேட்டனர்.

### டிசம்பர் 24,2022-சனிக்கிழமை

### இரண்டாம் நாளின் முதல் அமர்வு

இரண்டாம் நாளின் முதல் அமர்வு பஹ்ஷ்தி மக்பரா காதியான் மஜ்லிஸின் கார்பர்தாஸ் செயலர் மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது சாஹிப் ஹாஃபிழ் ஆபாதி அவர்களின் தலைமையில் துவங்கியது. சத்ர் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் கபாபீர் மதிப்பிற்குரிய ராஷித் சாஹிப் அவர்கள், சூரா அந்நூரின் வசனங்கள் 31 முதல் 33 வரை திருக்குர்ஆனிலிருந்து திலாவத் செய்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் ஆசிரியர் மதிப்பிற்குரிய மவ்லவி முர்ஷத் டார் சாஹிப் மிகவும் அழகிய குரலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய கவிதைகளை படித்தார்கள்.

இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை நாஸிர் தஃவத்தே இல்லல்லாஹ் மர்கஸிய்யா வட இந்தியா, மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது ஹமீத் கவ்சர் சாஹிப் அவர்கள் இஸ்லாமிய பர்தா மற்றும் அதன் அவசியமும், முக்கியத்துவமும், அருட்களும் என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள்.

அதன் பிறகு, நாஸிர் சாஹிப் இஸ்லாஹ் வ - இர்ஷாத் மர்கஸிய்யா காதியான், மதிப்பிற்குரிய முஸஃபர் அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்கள் தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் திலாவத் ஓதுவதன் முக்கியத்துவமும், அருட்களும் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

### இரண்டாம் நாள்- இரண்டாம் அமர்வு

இரண்டாம் நாளின் இரண்டாம் அமர்வு சர்வ சமய மாநாடு என்ற ரீதியில் நடத்தப்படுகிறது. அதில் பங்கு பெறுவதற்காக பல்வேறு மார்க்கங்களின் தலைவர்களும், சாதுக்களும், பண்டிதர்களும், தேவாலயங்களின் பாதிரிமார்களும் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் மட்டுமின்றி அரசியல் தலைவர்களும் வருகை தருகின்றனர். அந்த விருந்தினர்கள் ஜல்ஸா மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனைகள் தொடர்பான தமது எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர்.

இந்த அமர்வு சத்ர் மஜ்லிஸ் வக்ஃபே ஜதீத் மதிப்பிற்குரிய தன்வீர் அஹ்மது சாஹிப் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் ஆசிரியர் மதிப்பிற்குரிய லுக்மான் அஹ்மது தகீ சாஹிப் அவர்கள் சூரா அந் நமலின் 61 முதல் 64 வரையிலான வசனங்களை ஓதினார்கள். அதன் மொழியாக்கத்தை அதாவுல்லாஹ் சாஹிப் நுஸ்ரத் அவர்கள் வாசித்துக் காட்டினார்கள்.

அதன் பிறகு உலக அமைதியும், இஸ்லாமும் என்ற தலைப்பில் பஞ்சாபி மொழியில் மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் அஹ்மது காதிம் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதன் பிறகு கூட்டத்தின் தலைவரின் அனுமதியுடன் மதிப்பிற்குரிய தன்வீர் அஹ்மது காதிம் சாஹிப் அவர்கள் மேடையில் அமர்ந்திருந்த அனைத்து முஸ்லிம் அல்லாத கண்ணியத்திற்குரிய விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார்கள். அவர்களில் சிலர் காதியான் ஜல்ஸா தொடர்பான தமது கருத்துகளை எடுத்துரைப்பதற்காக அழைக்கப்பட்டார்கள்.

அவர்களின் பெயர்கள் கீழ் வருமாறு:

(1) டாக்டர் பல்ஜீத் கோரா சாஹிபா- பஞ்சாப் மாநில அரசாங்கத்தின் அமைச்சர்

(2) ஜக்ரூப் சீக்வான் (3) சுவாமி ஆதேஷ் பூரி சாஹிப், ஹிமாச்சல் - இந்து மதப் பிரதிநிதி

4) ஃபத்ஹே சிங் பாஜ்வா- காதியான் நகர பிஜேபி தலைவர் 5) டில்லி இஸ்கான் கோவில் தலைவர் கேஷு முராரீ தாஸ் 6) கூரிந்த் சிங் கோரா, 7) பிரதாப் சிங் பாஜ்வா- காதியான் எம்.எல்.ஏ 8) அமன் ஷேர் குல்ஸி சாஹிப் - எம். எல். ஏ பட்டாலா, 9) அன்வர் இக் சூத் சாஹிப்- ஹோஷியார்பூர்

இந்த விருந்தினர்கள் மட்டுமின்றி, இன்னும் சில கண்ணியத்திற்குரிய விருந்தினர்களும் மேடையில் அமர்ந்திருந்தார்கள். அவர்களை மதிப்பிற்குரிய தன்வீர் அஹ்மது சாஹிப் காதிம் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள். மேலும், அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌவரவிக்கப்பட்டார்கள்.

### டிசம்பர் 25, 2022 ஞாயிற்றுக்கிழமை

### மூன்றாவது நாள் துவக்க அமர்வு

மூன்றாவது நாளின் துவக்க அமர்வு நிகழ்ச்சிகள் காலை 10.05 மணியளவில் திருக்குர்ஆன் திலவாவத்துடன் ஆரம்பமானது. மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இன்ஸ்பெக்டர் மதிப்பிற்குரிய ஹாஃபிழ் ஃபாரூக் அஃஸம் சாஹிப் சூரா ஆலிஇம்ரானின் வசனங்கள் 103 முதல் 106 வரை திலாவத் செய்தார்கள். அந்த வசனங்களின் பத்ர் வாரப் பத்திரிகையின் மொழியாக்கம் எடுத்துரைத்துரைக்கப்பட்டது. அதன் பிறகு, மதிப்பிற்குரிய துபைர் அஹ்மது ஷமீம் சாஹிப் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கவிதைகளிலிருந்து சில வரிகளை அழகிய குரலில் படித்தார்கள்.

இந்த அமர்வில் கண்ணியத்திற்குரிய மூன்று ஆலிம் பெரும் மக்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர். முதல் சொற்பொழிவு சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத், மதிப்பிற்குரிய கே. தாரிக் அஹ்மது சாஹிப் அவர்கள் கிலாஃபத் பாதுகாப்பு கோட்டை என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அடுத்து நாயிப் நாஸிம் இர்ஷாத் வக்ஃபே ஜதீத் மதிப்பிற்குரிய மவ்லானா நிஃமத்துல்லாஹ் நவாஸ் சாஹிப் தப்லீக் மற்றும் தஃவத்தே இலல்லாஹ்வின் முக்கியத்துவமும் அருட்களும் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ஸதர் அன்ஸாருல்லாஹ் பாரத், மதிப்பிற்குரிய அதாவுல் முஜீப் லோன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆ ஒப்புக் கொள்ளப்படுதலின் ஈமானை வலுவூட்டக்கூடிய சம்பவங்கள் மற்றும் துஆக்கள் தொடர்பாக ஹுஸுர் அன்வர் அவர்களின் அறிவுரைகள் என்ற தலைப்பில் அந்த அமர்வின் மூன்றாவது சொற்பொழிவை நிகழ்த்தினார்கள்.

### மூன்றாவது நாள் - நிறைவு அமர்வு

இன்று மூன்றாவது நாள் நிறைவு அமர்வு ஜமாஅத்தின் வழக்கமான

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 26 January 2023 Issue No. 4

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

மரபுகளுக்கேற்ப திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய நஸ்ருமினல்லாஹ் சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய கவிதை வரிகளிலிருந்து அழகிய குரலில் படித்தார்கள்.

அதன் பிறகு, மதிப்பிற்குரிய நாஸிர் சாஹிப் ஆஃலா சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான், அவர்கள் நன்றியுரை நிகழ்த்தியவாறு உள்ளூர் அளவில் துஆ செய்து நிறைவு செய்து வைத்தார்கள்.

## இலண்டனிலிருந்து நிகழ்ச்சிகள்

வழக்கம்போல் இந்த ஆண்டும் ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இலண்டனிலிருந்து பரிவுகூர்ந்து ஜல்ஸா ஸாலானா காதியானின் நிறைவு அமர்வில் நிறைவுரை நிகழ்த்தினார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்திய நேரப்படி சரியாக மாலை 4 மணியளவில் வருகை தந்தார்கள். மதிப்பிற்குரிய ஃபிரோஸ் ஆலம் சாஹிப் திருக்குர்ஆன் ஓதினார்கள். மேலும், மதிப்பிற்குரிய நாஸிர் அலி உஸ்மான் சாஹிப் நஸ்ம் படித்தார்கள். அதன் பிறகு, நாரே தக்பீர் முழக்கங்களுக்கு மத்தியில் ஸய்யிதுனா அமீருல் மூஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகவும் அகப்பார்வை நிறைந்த சொற்பொழிவை தொடங்கினார்கள்.

### ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சொற்பொழிவின் சுருக்கம்

தஷஹ்ஹுது தவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இன்று அல்லாஹ்வின் அருளினால், காதியான் ஜல்ஸா ஸாலானாவின் கடைசி நாளாகும். அல்லாஹ்வின் அருளினால் இந்த மூன்று நாட்களும் அல்லாஹ்வின் அருட்களைப் பெற்றவாறு கழிந்துவிட்டன.

இந்த நாட்களில் நைஜீரியா, ஐவரிகோஸ்ட், கினிபஸாவ், கினிகனாகிரி, டோகோ, ஃபுர்கினோஃபாஸூ, மாலி, மற்றும் ஜிம்பாவே போன்ற சில ஆஃப்ரிக்க நாடுகளிலும் ஜல்ஸா ஸாலான நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் அல்லாஹ் தனது அருளினால் mta மூலமாக நாம் ஒருவர் மற்றவரை பார்ப்பதற்கும், கேட்பதற்கும் நற்பேறு வழங்கியுள்ளான். ஒரேநேரத்தில் அனைத்து நாடுகளிலும் எனது சொற்பொழிவை அனைவரும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். மேலும் பார்த்தும் வருகின்றனர். இதுவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லாஹ், தான் செய்த வாக்குறுதிகளை முழுமை செய்வதற்கான வெளிப்பாடாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், மார்க்க, ஆன்மீக, மற்றும் நல்லொழுக்க முன்னேற்றங்களை இந்த மாநாட்டின் நோக்கமாக கூறியுள்ளார்கள். மேலும் அதில் மிக தீவிரமாக அழுத்தமும் கொடுத்துள்ளார்கள். அந்த நோக்கங்களை அடைவதற்காகவே இன்று அல்லாஹ்வின் அருளினால் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் எங்கெல்லாம் முறையாக அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைபெற்றுள்ளதோ அங்கு ஜல்ஸா ஸாலான நடைபெற்று வருகிறது. 1891-ல் குறுகிய கால ஜல்ஸாவில் 75 நபர்கள் கலந்து கொண்டனர். 1892-ல் முறையாக நடைபெற்ற ஜல்ஸாவில் 327 நபர்கள் கலந்து கொண்டனர். இன்று அல்லாஹ்வின் அருள் மழை எந்த அளவுக்கு பொழிந்து கொண்டு வருகிறது என்றால் அல்லாஹ் எல்லா நாட்டிலும் நமக்கு ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் ஜல்ஸாவில் கலந்து கொள்ளக்கூடிய நபர்களை காட்டுகின்றான். இந்த ஒரு விஷயமே ஆட்சேபனை செய்பவர்களுக்கு அல்லாஹ்வின் உதவி மற்றும் ஒத்தாசை மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்கு போதுமானதாகும். எவ்வாறு இருப்பினும், எதிரிகளுக்கு இது தென்பட்டாலும், தென்படவில்லையென்றாலும் இது அல்லாஹ்வின் உதவிகளாகும். மேலும் இது அல்லாஹ்வின் அருளாகும். ஆனால், அல்லாஹ்வின் இந்த அருட்கள் மற்றும் கருணையின் விளைவாக நம் மீது என்ன பொறுப்புகள் உள்ளன? நாம் ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்காக ஒன்றுகூடிவிட்டோம். உலகின் பல்வேறு இடங்களில் அமர்ந்து கொண்டு கேட்டுக் கொண்டிருக்கின்றோம். அதன் காட்சிகளையும் நாம் பார்த்து வருகின்றோம். ஆயினும், இந்த அருளிலிருந்து நாம் பயன்பெறுவதற்கும், அதன் நோக்கத்தை நிறைவு செய்வதற்கும் நமது பொறுப்புகளையும் நாம் ஆற்ற வேண்டும். நாம் ஜமாஅத்தில் இணைந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் செய்த நமது உடன்படிக்கைகள் மற்றும் நமது வாக்குறுதிகளை முழுமை செய்ய வேண்டும். அதற்காக நாம் நம்மிடத்தில் தூய மாறுதல்களை உருவாக்க வேண்டும்.

### ஜல்ஸா ஸாலானாவின் அடிப்படையில் நம் மீது சுமத்தப்பட்ட கடமைகளின் பக்கம் கவனமூட்டியவாறு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்துவிட்ட பிறகு, நாம் நமது நிலைமைகளை அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைகள் மற்றும் முன்மாதிரிக்கேற்பவும், பைஅத் நிபந்தனைகளுக்கு ஏற்பவும் செயல்பட்டு அதனை பேணி நடக்க வேண்டும். அந்த பைஅத் நிபந்தனைகளில் இரண்டாவது நிபந்தனையைக் குறித்து சில விஷயங்களை நான் எடுத்துரைப்பேன். நாம் அதற்கேற்ப நமது வாழ்க்கையை கேடயமாக ஆக்கிக் கொண்டால் நாம் நம்மிடத்திலும் உலகிலும் ஒரு மகத்தான புரட்சியை உருவாக்க முடியும். நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த இரண்டாவது உடன்படிக்கை இதுவாகும்:

பொய், விபச்சாரம், தீய பார்வை, அனைத்து வகையான தீமைகள், அநீதி, நம்பிக்கை துரோகம், குழப்பம் மற்றும் கிளர்ச்சியின் வழிமுறைகளிலிருந்து நான் விலகியிருப்பேன். மனஉணர்ச்சிகள் எவ்வளவுதான் மேலோங்கினாலும் அதற்கு கீழ்படிய மாட்டேன்.

இதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 9 தீமைகளைக் குறித்து குறிப்பிட்டுள்ளார்கள். அதனை விட்டு விலகிவிடுதன் மூலம் மனிதன் ஆன்மீகம் மற்றும் நல்லொழுக்கத்தில் முன்னேற்றம் அடைய முடியும். ஹுஸூர் அன்வர் அவர்கள் மேற்குறிப்பிட்ட தீமைகளிலிருந்து தப்பிப்பது தொடர்பாக திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் வழங்கப்பட்டுள்ள கட்டளைகளை எடுத்துரைத்தார்கள். மேலும் அது தொடர்பான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களையும் எடுத்துரைத்தார்கள். அதேபோன்று ஹுஸூர் கூறினார்கள்: இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ள அனைவரும், தங்களிடத்தில் தூய மாறுதல்களை ஏற்படுத்துவோம் என்றும், பைஅத் உடன்படிக்கைகளை முழுமையான ஆற்றலுடன் நிறைவேற்றுவோம் என்றும் உறுதிமொழி எடுக்கும்படி கூறினார்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கு நற்பேறு வழங்குவானாக. அல்லஹ் அனைவரையும் தனது பாதுகாப்பின் கீழ் வைப்பதற்கு துஆ செய்யுங்கள் என்றும் கூறினார்கள்.

அதன் பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் துஆ செய்தார்கள். முழு உலகிலும் உள்ள அஹ்மதிகள் mta மூலமாக அந்த துஆவில் பங்குபெற்றார்கள். அல்லாஹ் இந்த ஜல்ஸாவின் அனைத்து அருட்கள், பரக்கத்துகள், மற்றும் ஒளிகளை நமது வாழ்வின் நிரந்தர பகுதியாக ஆக்குவானாக. தலைமுறை தலைமுறையாக அதன் அருளை எப்போதும் தொடரச் செய்வானாக. ஆமீன்.

**National Watch Company**
Sales & Service



B. Mohamed Adil
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad